
முதலாம் ஆண்டு நிறைவு இதழ்
ஞானக்கதிர்
அன்பு-அறநெறி-ஆன்மீகம்
இந்து சமய மாத மஞ்சரி

எம் நாட்டில் இந்து மதத்துக்கென இதுவரை எவ்வித இதழ்களும் கிடையாது ஆனால் தங்கள் முயற்சி இந்து மக்களுக்கு ஒரு விழிப்புணர்வை தரும் என்று எண்ணுகிறேன்.

க. கந்தசாமிகுருக்கள்
குடியிருப்பு
வவுனியா

இலங்கையில்- சமய- அறநெறி - ஆன்மீக வளர்ச்சிக்கு ஏற்றவகையில் பத்திரிகையில் இல்லாதிருந்தகுறையை தாங்கள் ஓரளவு போக்க முன்வந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்·

பக்தி மயமான அட்டைப்படங்கள் சிறப்பாகஉள்ளன, பத்திரிகை இடையில் நின்றுவிடாமல்- தொடர்ந்து பல்லாண்டு காலம் சிறப்புடன் வெளிவர வேண்டும் என்பதே எமது விருப்பம்.

கே. எம். வாசகர்
கன்னன்குடா:
மட்டக்களப்பு

வில்வம் பசுபதி எழுதிய ''யாதுமாகி நின்றாய்'' ''நிழல் நிஜமாகிறது'' என்ற சிறப்புச் சிறுகதைகள் என்னை சிந்திக்க வைத்தன, வில்வம் பசுபதிக்கு எனது பாராட்டுக்கள்.

சு. சிவானந்தஜோதி
(சிவா)
துன்னாலை வடக்கு
கரவெட்டி

தாங்கள் திருவருட்டுணையுடன் மாதாந்தம் வெளியிடும் ஞானக்கதிர்களைக் கண்ணுற்றேன், கண்ணைக் கவரும் அட்



டைப்படத்துடன், இக்கால இளைஞர்களை ஈர்க்கும் வகையில் விஞ்ஞான ரீதியான விளக்கங்களும் சமய அநுட்டான விதிமுறைகளும் இவ்வாழ்க்கை வளம் பெறச் கைக் கொள்ள வேண்டிய அறிவுரைகளும் கொண்டு கருத்திவிக்கும் கதைகளும் இறையின்பம் வளர்க்கும் கட்டுரைகளும் பொதிந்து மாதாந்தம் வெளிவரும்கதிரினைப் பாராட்டாமல் இருக்க முடியாது,

சோ. க. வேலாயுதர்
''குமரன் அகம்''
பண்ணாகம்
சுழிபுரம்

ஞானக்கதிர் ஒவ்வொரு மாதத்தின் மகிமையும் மக்கள் அறியும் வண்ணம் விஷயங்களை தாங்கி வருவது நல்லதொரு விடயமாகும் ஐப்பசிமாத இதழில்' சூரபன், மன் கொல்லப்படவில்லை ஆட்கொள்ளப் பட்டான்' என்ற கட்டுரை பலரது மனதையும் உருக வைத்திருக்கும். 'வாகீசர் வாழ்வும் வளமும்' என்ற கட்டுரையை இன்றைய சமூகத்தில் உள்ள மதம் மாறியவர்கள் வாசித்தால் நல்லதாகஇருக்கும். 'வேண்டத்தக்க தறிவோய் நீ' என்ற சிறப்புக் கதைமூலம் ஆலயமும் இறைவனும் மக்களிடையே ஒற்றுமையை¦ அன்பை ஏற்படுத்த உதவுகின்றன என்ற உண்மையை எடுத்துக் காட்டியுள்ளது ஞானக்கதிர் இந்துக்களிடையே ஓர் இறையுணர்வையும் சமய உணர்வையும் ஏற்படுத்த மேலும் நல்ல கருத்துக்களை முன்வைக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

க. சிவசங்கரநாதன்
சரசாலை இந்து இளைஞர்மன்றம்
சரசாலை
சாவகச்சேரி

ஞாலத்தில் ஞானம் திகழ
ஞானக் கதிர் மலர்ந்தது
நலமுடனே வாழ்க வென்று
நாமும் வாழ்த்துகிறோம்.
''ஞானக்கதிராம் நன் நூல்
இனிதாம்
ஞானமே வடிவாம் வருவாய்
சுந்தரமே
ஞானக் கதிரின் படைப்புக்கள்
அற்புதம்
ஞாலம் எங்கும் திருவாய்
பொழிவாய்.

ச சாம்பசிவம்
சன்மதி ச. சமூக நிலையம்
உடுவில் கற்பொக்கனை

'ஞானக்கதிர், எல்லாவகையிலும் சிறப்புற்று எக்காலமும் வளர நல்லைக் கந்தனின் நல்லருள் துணை நிற்கட்டும்

''வண்ணைக் கவிஞன்''
எஸ். கே, யோகநாதன்
பிரதம ஆசிரியர்
துர்க்கா

# சமயத்தொண்டு ஓங்குக

நல்லதொரு தரமான சைவசமய சஞ்சிகை இல்லாத குறையை ஞானக்கதிர் தீர்த்து வைத்துள்ளது. நாம் அனுபவித்த சொல்லொணாத் துயர்களுக்கும், இடர்களுக்கும் காரணம், எல்லாம் வல்ல இறைவனை நாம் மறந்திருந்ததே.

மக்களிடையே அசைக்க முடியாத தெய்வ உணர்வு, தெய்வ நம்பிக்கை, பரோபகார சிந்தனை, நல்லொழுக்கம் ஆகிய நற்பண்புகளை வளர்க்க 'ஞானக்கதிர்' உறுதுணை நிற்குமெனில் அது மிகையாகாது.

அதன் ஓராண்டு நிறைவை முன்னிட்டுச் சித்திரை சிறப்பிதழ் வெளியிடவிருப்பதறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

ஞானக்கதிரினது சைவசமயத் தொண்டுகள் யாவும் மேன் மேலும் வளர்ந்தோங்க வேண்டுமென எல்லாம் வல்ல பரம்பொருளின் பாதாரவிந்தங்களை உளமாரத் தியானித்து எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு!



ஸ்ரீலஸ்ரீஸ்வாமிகள்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
பருத்தித்துறை வீதி, நல்லூர்.

* * *

## ஞானஒளி வீசுக!

மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பல சமய ஏடுகள் வருகின்றன – ஆனல் – பக்தி முத்தி விளையாடிய சித்தர்கள் திரிந்த நம் மண்ணில் சமய ஏடுகள் இல்லை என்ற குறையை – இக்கால இக்கட்டுகளிலும் – பொருளாதாரக் கஷ்டங்களிலும் கூட நிவர்த்தி செய்ய முன்வந்த உங்களைப் பாராட்டுவது எமது கடமை–

''ஞானக்கதிர்'' மிக சிறப்புடன் கட்டுரைகளை வெளியிட்டு கதிரொளி வீசுகின்றது–

திருமதி. நீ. இராஜம்புஷ்பவனம்
சாவகச்சேரி.

# சிவநெறிப் பணி சிறக்கட்டும்



மெய்ஞ்ஞானம் வளர புலன்களால் ஏற்படும் உணர்வை மாற்றி அமைக்க வேண்டும். எவ்வகை உணர்ச்சியானாலும் தெய்வத்தின் மேல் செலுத்த வேண்டும். இறைவனுடைய நாமத்தை ஓதுவதனால் நமக்கு நல்லுணர்வு ஏற்படுகின்றது.

பக்தி நூல்களை ஓதுதலும் பக்தரோடு இணக்கம் வைத்தலும் வேண்டும். பகவான் பக்தர், பாகவதம் எல்லாம் ஒன்று என்று பரமஹம்சர் ஞானக்காட்சி பெற்றார். ஆழ்ந்து சென்று அருள் நிலையில் அழுந்திய போது பாகவதப்பட்டரை அரசன் முடி சாய்த்து வணங்கினான். உணர்ந்து படித்துக் கருத்துக்களை நம்மயம் ஆக்குதல் வேண்டும்.

'வேறு எண்ணம் இல்லாமல் சிந்திப்பவரை நான் காப்பாற்றுவேன் என்கிறார் கீதையில் கண்ணன். சுவாமி விவேகானந்தர் தம் இறுதி நாளன்று வியாகரணம் பாடம் சொன்னார். தாமே சமைத்தார். சீடர்களுக்குப் பரிமாறினார். சீடர் ஒருவரை வாயிலில் காவல் வைத்தார், உள்ளே சென்றார். உடலை உகுத்தார். இன்பத்தில் தொடங்கி இன்பத்தில் முடிப்பது ஞான வாழ்க்கை.

கடந்த ஓர் ஆண்டு காலமாக ஞானக்கதிர் நம் மக்கள் அனைவருக்கும் சமய அறிவூட்டி சமய உணர்வூட்டி திகழ வைத்த பெருமை போற்றுதற்குரியது. தொடர்ந்தும் இந்தச் சிவப்பணியை ஞானக்கதிர் ஆற்ற எல்லாம் வல்ல இறைவனின் திருவருளை வேண்டி நிற்கின்றோம். ★

**சுவாமி சித்ரூபானந்தா**
சாரதா ஆச்சிரமம்,
பருத்தித்துறை.

---

## வாழ்க! வளர்க!!

ஈழத்திலிருந்து இப்படியொரு சமய இதழ் வெளிவருவது பெரிதும் பாராட்டுக்குரியது.

**மாஸ்டர் சிவலிங்கம்**
மட்டக்களப்பு

## புதிய கதிர்

நமது ஞானக்கதிரின் ஞானசித்தம் கண்டு பூரித்தேன். ஈழத்தின் புதிய கதிர் இது கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இந்து சமய நெறியில் பயிலும் எமக்கு 'ஞானக்கதிர்' மிகுந்த உதவியாக இருக்கிறது. மீண்டும் பக்தி மார்க்கத்தில் புத்துயிர் கண்டு வரும் ஈழத்திற்கு ஞானக்கதிரின் வரவு உரம் சேர்க்கிறது.

**வி. நவரெத்தினராசா**
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

# அன்புசால் வாசகர்களே!

"அற்ற மறைப்பதுமுன் பணியே
அமரர்கள் செய்வதுமுன் பணியே"

அனைத்திலும் அடங்கிய, எல்லாம் வல்ல தெய்வத் திருவருளின், அருட்கருணையால், ஓர் அகவை அகன்ற பின்னர், மீண்டும் உங்களைச் சந்திக்கிறோம்.

ஈழத் தமிழ் மண்ணில் இருள் கவிழ்ந்திருந்த வேளையில், அஞ்ஞானம் மக்களை அவித்த காலத்தில், சமயப்பணி செய்வது ஒரு சமூகப் பணியே என உணர்ந்து "ஞானக்கதிர்" ஒளி வீச எழுந்தது.

இந்து சமய தத்துவங்களையும், அற நெறிகளையும், அவற்றின் அவசியத்தையும், அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்தலின் தேவையையும் புகட்டும் விதத்தில், அறிவொளி பரப்ப "ஞானக்கதிர்" தன்னாலான முயற்சிகளை மேற்கொள்வான் என்று அப்போது உறுதி கூறியிருந்தோம்.

சாமானியனும் சமயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும், புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்றும் விதத்தில் ஞானக் கதிர் கடந்த ஒரு வருட காலமாக பணி ஆற்றியதை நீங்கள் அறிவீர்கள்.

எமது மண்ணின் சமயப் பாங்கினை எடுத்தியம்பும் விதத்திலும், தனித்துவம் மிளிரும் வகையிலும் 'ஞானக்கதிர்' தனது தொண்டினைச் செய்வதற்கு வாசகர்களாகிய நீங்கள் அளித்த ஆதரவிற்கும், ஆர அபிமானத்துக்கும் எமது நன்றிகள். அவையே ஞானக் கதிரின் சேவைக்கு மூல வேர்களாக அடியோடின.

எதிர்வரும் காலத்தில் "ஞானக்கதிர்" பல்வேறு புதிய அம்சங்களுடன் ஒளி வீசுவதற்கு, உங்கள் தொடர்ச்சியான, அன்பான ஆதரவை நாடுகிறோம்.

எமது முயற்சி எல்லாம் ஞான வள்ளலாம், அளவற்ற அருள் நாதனும் இறைவனின் அருட் கொடை என்ற சிந்தனையுடன், எமது பணியைத் தொடர அவன் திருக்கழல் ஏத்துகின்றோம்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே."

-பிரதம ஆசிரியர்-

# ஞான ஒளி வீசுக!

சுக்கிலத் திங்களிலே சுப வேளையிலே தோன்றிய ஞானக்கதிர் ஆதவன் என ஆண்டொன்று தமிழ் வாழ் மானிலம் வலம் வந்து பிரமோதூத முன்மதியிலே பிரபையை இரட்டித்திருப்பது அந்த அருள் ஒளியில் ஆனந்த பரவசம் அடைந்து நிற்கும் அன்பர்களின் ஆசியென்ற உயிர்ச்சத்தினுலென்க.



சைவ ஞானம் என்ற திவ்விய கதிரொளியை மதி வண்ணமாகப் பரப்புவதெனின், அது கைவந்த அறிஞர்களுக்கே உரிய ஆற்றலுக்கமைவாகும்.

முப்பொருளை, மும்மூர்த்தியை, முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளை, முன்னும் பின்னும் இலா முடிவிலானந்தத்தை மானுடர்கள் சற்றேனும் உற்று நோக்கி உணர வைப்பதுதான் ஞானம். இந்த அரியதும் பெரியதுமான நிலையைச் செந்தமிழ்ச் செறிவுறும் அன்பர்கள் சிந்தை செல்ல வைக்கும் நெறியிலே சிறந்த திங்கள் வெளியீடாக ஞானக்கதிர் ஒளிவிளங்கி வந்திருக்கின்றது.

இரண்டாம் ஆண்டுப் பராயம் உருண்டோடி மூன்றும் அகவையில் முன்னிற்க இறைவனை இறைஞ்சுவோமாக.

நம. சிவப்பிரகாசம்
"இந்துசாதனம்"
பிரதம ஆசிரியர்


# 'ஞானச் சுடரொன்று'

அருள் அறம் உலகில் ஓங்க
ஆத்மீக சக்தி வெல்ல
இருள் மனக் குணங்கள் மாள
எங்குமே அமைதி பொங்க
தருமமாம் சக்தி என்றும்
தரணியே ஆள்வதற்கே
பெருமை சேர் ஞானக்கதிர் சுட
ரொன்று
பெட்போங்கி எழுந்த தன்றே
இந்து சமயக் காட்சி எல்லாம்
இனிக்கும் தமிழில் கட்டுரையாய்
தந்து எங்கள் சிந்தையிலே
தவழ்ந்த ஞானக் கதிரம்மா
மூந்தைப் பெரியோர் கண்ட வழி
முறையாய் அவர்தம்அடிச்சுவட்டில்
வந்து ஈழ மண்வாழ
வந்த ஞானக் கதிரோனும்

— கவிஞர் கண்மணிதாசன்
விஸ்வப்பிரம்மஸ்ரீவை.கே.எஸ்.காந்தன்
குருக்கள்
பிரம்மாதீனம்
பெரியபோரைதீவு
களுவாஞ்சிக்குடி

## பாபாவின் மகிமைகள்

# உயிர் பெற்ற ஓவியம்



ஸ்ரீமதி விஜயம் ராஜ கோபால அய்யாங்கார் அறுபதை நெருங்கிய பக்தி சிரத்தை கொண்ட, ஒரு பெண்மணி. அவருடைய ஏழு பிள்ளைகளும் வளர்ந்து பெரிதானதன் பின்னர், அவருக்குத் தனது இஷ்டப் படியே நடக்கத் தேவையான நேரம் இருந்தும் கூட 60 வயதின் பின்பே ஓவியந் தீட்டுவதிலும் ரசனைக் கலைகளிலும் அவர் ஈடுபடத் தொடங்கினார்.

அவர் என்ன சொல்கிறார்? எனது குழந்தைப் பராயத்தில் சில ஓவியங்கள் தீட்டிய ஞாபகம் வருகிறது. எனக்குப் 10 வயதாகையில் நான் திருமணம் செய்தேன்; அதன்பின்னர் ஒருபொழுதும் ஓவியந் தீட்டும் தூரிகையைத் தொட்டதேயில்லை. எனது வாழ்க்கையின் பிற்காலத்தில் நான் வழிபடும் திருப்பதி வெங்கடேஸ்வரப் பெருமான் ஓவியந் தீட்டுமாறு சடுதியான ஓர் உந்தல் என்னுள்ளே தோன்றியது இதனால் தூரிகைகளையும், வரைபடத் தாள்களையும் நான் சேகரிக்கத் தொடங்கினேன்; நான் ஓவியத்தை வரைகையில்என்னை முற்று முழுதாக மறந்து விட்டேன் என்றே கூற வேண்டும்; ஓவியம் தானாகவே வெளிப்பட்டுவிட்டது; எனது வெங்கடேஸ்வரப் பெருமானைத் தவிரவேறு எவற்றிலும் எனது எண்ணம் செல்லவில்லை;

ஒரு மதியம் கடந்த நேரத்தில், அவர் ஓவியந் தீட்டிய வண்ணம் இருக்கையில் அவரது மகள் உள்ளே புகுந்து வினவினாள் 'இந்த மதியம் கடந்த நேரத்தில் எங்கிருந்து இக்சர்ப்பூர வாசனை வருகிறது? என்று சுற்று முற்றும் அவர்கள் தேடிப்பார்த்து கண்டு பிடித்த பொழுது அவர்களைத் திகைப்பூட்டும் வகையில் அந் நறுமணம் அந்த ஓவியத்திலிருந்தே வந்து கொண்டிருந்தது.

ஞா: குகஞானி

அச்சமயம் வெங்கடேஸ்வரப் பெருமானுக்கு ஊதுவத்தி எரிக்கும் காட்சியை சிறீமதி அய்யாங்கார் ஓவியமாக வரைந்து கொண்டிருந்தார். ஓவியச் சீலையில், ஊதுவத்தி புகையும் காட்சி தீட்டப்பட்ட இடத்திலிருந்தே அந்நறுமணம் வந்து கொண்டிருந்தது. அவர்கள் ஆச்சரியத்தில் மூழ்கிப் போயிருந்தார்கள்.

## மலர்களின் நறுமணம்


பூக்களை ஓவியமாக, சிறீமதி அய்யாங்கார் தீட்டுகையில் அறைக்கூடம் முழுவதும் அவர் தீட்டும் பூக்களின் நறுமணத்தால் திகழ்ந்திருக்கும். ஒவ்வொரு மலரின் சுகந்தமும் ஓவியத் துணியில் தீட்டப்பட்ட அம் மலரில் இருந்து தனக்கே உரிய நறுமணத்தைக் கூடம் முழுவதும் பரப்பிக் கொண்டிருக்கும். ஒரு முறை துளசி தளங்களை ஓவியமாக அவர் தீட்டுகையில் வீடு முழுவதுமே துளசியின் நறுமணத்தால் நிறைந்து விட்டிருந்தது.

சிறீமதி அய்யாங்காரிடத்தில் உணர்ச்சி எங்கேயாவது எப்பொழுதாயினும் பொங்கி எழுகையில் மற்றைய தெய்வீக ஸ்வரூபங்களை ஓவியமாகத் தீட்ட முனைவார். ஒவ்வொரு ஓவியமும் நாளாந்த விளக்கங்களையும், கட்டற்ற, புதிர்மிக்க, நவமான அநுபவங்களையும் அவருக்கு கொடுத்து வந்தது. ஒருநாள் ஓர் ஓவியத்தில் காணப்படும் தெய்வத் திரு உரு முன்பு, நெருப்பைத் தீட்டுகையில் வெப்பம் தகிப்பதை அவர் உணர்ந்தார். ஓவியங்களை எங்கு அவர் தீட்டினாலும் எப்பொழுது வரைந்தாலும், அவ்விடம் கோயிலின் கர்ப்பக்கிரகத்தில் துலங்கும் மணத்துடனும், எரியும் கற்பூரத்தினதும், ஊதுவத்திகளின் அடர்ந்த வாசனையுடனும் மணம் கமழ்ந்திருக்கும்.

சிறீமதி அய்யாங்காரின் அனுபவங்கள் இவை போன்று பற்பல. ராஜராஜேஸ்வரி அம்பாளினை, அவர் ஓவியமாக தீட்டுகையில், ஓவியத்திலுள்ள அம்பாளின் சிரசில் இருந்து நறுமணமிக்க நீர் உற்பத்தியாகி யாரோ அபிஷேகம் செய்வது போன்று தரையில் வழிந்து கொண்டிருந்தது. கூடத்தில் சிறீமதி அய்யாங்காரையும், அவரது தூரிகைகள், வர்ணக் கலவைகள் இவற்றைத் தவிர, வேறு ஒருவரும் இல்லாதிருக்கையில் கிருஷ்ணரின் ஓவியந் தீட்டும் போது, புல்லாங்குழல் ஒன்று இனிய கானங்களை அறையில் இசைத்தது.

இப்படி சம்பவங்கள் அநேகம் மிகவும் ஆச்சரியம் மிகுந்துள்ளதால், இவற்றைப்பற்றிப் பேசுவதற்கு, சிறீமதி அய்யாங்கார் விரும்பவில்லை.

'உமது ராமாயண ஓவியத்தில் எமது மூத்த சகோதரர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள முப்புரி நூல்களை ஏன் எங்களுக்கும் அணிவிக்கவில்லை' என்று ராமரின் இளைய சகோதரர்களாகிய பரதரும், சத்துருக்கனும் கனவில் தோன்றி, சிறீமதி அய்யாங்காரைக் கேட்டனர். திடுக்குற்று எழுந்திருந்த அவர், நிறைவு பெறுது இருக்கும் ஓவியத்தை அணுகிப் பார்க்கையில், பரதருக்கும், சத்துருக்கினனுக்கும் உண்மையாகவே முப்புரி நூலை அவர் தீட்டியிருக்கவில்லை. இன்னொரு தினம் வெங்கடேஸப் பிரபுவின் மேல் துலங்கும் தங்க ஆபரணங்களைத் தீட்ட விரும்பினார். காத்திராப் பிரகாரமாக, கோயிலில் இருந்து யாரோ வந்து, இவரையும், இவர் கணவரையும் தனிப்பட, கோயிலுக்கு அழைத்துச் சென்றார்கள். இதனால் தங்க ஆபரணங்களைப் பற்றி அவர் அறியக்கூடியதாயிருந்ததுடன், பின்னர் தான் கண்டவற்றை விசுவாசத்துடன் ஓவியத் துணியில் தீட்டவும் முடிந்தது.



# மாணிக்கக் கட்டியும் மண்ணாங் கட்டியும்

மாணிக்க வாசக சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்ட திருவாசகத்தில் பக்திச் சுவையையும் பரவச நிலையையும் வெளிப்படுத்தும் ஒரு சிறப்பான பகுதி 'கோயிற்றிருப்பதிகம்'. அவர் தில்லையில் (சிதம்பரத்தில்) தங்கியிருந்த பொழுது, திருப்பெருந்துறையில் உறையும், சிவபிரானின் தனிப்பெரும் கருணையை நினைந்து உருகிப் பித்தரானார். உடல் தில்லையிலும், உள்ளம் திருப்பெருந்துறையிலுமாக ஊசலாடி, அலையுண்ட நிலையில் பக்தியின் வசப்பட்டு அனலிடைப்பட்ட மெழுகு போல உருகிச் சிவபிரானை விளித்துப் பாடப்பட்டவை இந்தப் பாடல்கள்.

ஆன்மா சிற்றறிவும், சிறு தொழிலும், சிறிய ஆற்றலும் உடையது. பக்குவமடைந்த ஆன்மாவுக்கு இறைவன் தனது தெய்வ நிலையில் இருந்து இறங்கி, திருவருள் திறத்தை உணர வைத்து, இறுதியில் காட்சி கொடுப்பார். அவ்வண்ணமே, மாணிக்கவாசகப் பெருமானுக்கு அருள் புரிந்து, அவரை தனதாக்கிக்கொண்டு, தன்னையே அவருக்குக் கொடுத்து விடுகிறார்.

சிவபிரான் திருப்பெருந்துறையின் கண்ணே, அந்தண வடிவம் தாங்கி, குருந்த மர நிழலில் காட்சி கொடுத்து, வாதவூரருக்குத் தீட்சை வழங்கினார், சொல்லும் செயலும் அற்ற மௌன குருவாகி, சிவபிரானால் வழங்கப்பட்ட நயன தீட்சையினால் வாதவூரர் மலநீக்கம் பெற்றார். (தீட்சை:- மலத்தைப்போக்கி ஞானத் [குணத்] தைக் கொடுத்தல், நயனதீட்சை:- பார்வையால் சீடனை மல நீக்கம் செய்தல் )

மாணிக்க வாசகப் பெருமானை தான் ஆட்கொண்டருளியதால் சிவபிரானுக்கு அணுவளவேனும் பயனோ, இன்பமோ இல்லை. ஆனால் வாதவூரருக்கோ எல்லையில்லாத பேரானந்தம் கிடைத்து விட்டது' ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி ஆடினார், பாடினார், பித்தரானார்.

இறைவனின் திருவருள் திறத்தை வியந்து 'கோகழியாண்ட குருமணி தன் தாள் வாழ்க' என்று வாழ்த்தி, அவருடைய பல்வேறு தோற்றங்களையும் வாயார ''வாழ்க வாழ்க'' எனப் பலமுறை போற்றிப் பெருமிதமடைந்துள்ளார் (கோகழி:- திருப் பெருந்துறையிலுள்ள சிவஸ் தலம்)

அந்தண உருவில் வந்து ஆட் கொண்ட செயலை எண்ணி 'அந்தணனாவதும் காட்டி வந்து ஆண்ட அமுதே' என்று அழைத்துத் துதித்துப் பள்ளி எழுந்தருளும்படி இறைஞ்சுகிறார்.

## அழுத அருணசலம்

இவையாவும் திருப்பெருந்துறையில் நடந்தவை - பின்னர் -

தில்லையில் அவர் தங்கி இருந்த போதும், திருப்பெருந்துறையின் கண் கண்ட 'ஞான தேசிக திருமணி'க் காட்சியே சிந்தையை நிறைத்து ஆனந்த வெள்ளம் பெருக நிற்க' இறைவனுடன் பேசுகிறார்:-

'திருப் பெருந்துறையில் உறைகின்ற எம் பெருமானே! சிவபிரானே! இறைவனே! எனது உள்ளத்தையே திருக் கோயிலாக்கி, வீற்றிருந்தது மட்டுமன்றி எனது உடலையும் உனதாக்கிக் கொண்டாய்! உன்னையே எனக்குத் தந்து விட்டாய். இதனால் நான் எல்லையில்லாத பேரின்பம் பெற்றேன்-

பதிலுக்கு: உனது அருள் திருமேனியை, எனது உயிரும் உணர்வும் தங்குமிடமாக எனக்குத் தந்தனை. நீ என்னிடம் என்ன பெற்றனை. (ஒன்றும் இல்லை)

நான் என்னை உனக்கு தந்தேன் நீ என்னுள் புகுந்து உன்னை எனக்குத் தந்தாய்.

இது ஒரு புதுமையான பண்டமாற்று. சங்கரா! நீ ஞானமே வடிவானவன், இருந்தும், இந்த விஷயத்தில் ஏமாந்து விட்டாய்.



மதிப்பிட முடியாத 'மாணிக்கக் கல்லை எனக்குத் தந்து விட்டு, எதற்கும் உதவாத மண்ணாங்கட்டி'யைப் பெற்றுக் கொண்டனை ஆதலால் நின் பண்ட மாற்றினால், நம் இருவரில் யார் திறமையுடையவர்? சொல்லுக. இங்ஙனம் காத்திராத வகையில், என்னை மேலோனாக்கிய நின் மடமையின் பொருட்டும் உனக்கு ஒரு கைமாறும் செய்ய வகையறியேன்:

ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி ஆனந்த வெள்ளத்தில் அமிழ்த்தும் அந்த பாடல்:-

*தந்ததுன் தன்னைக் கொண்ட தென்றன்னைச்*
*சங்கரா ஆர் கொலோ சதுரர்*
*அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்*
*யாது நீ பெற்ற தொன் றென்பால்*
*சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்*
*திருப்பெருந் துறையுறை சிவனே*
*எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்*
*யான் இதற்கிலன் ஓர் கைம்மாறே*

'உடலிடங் கொண்டாய் சங்கரா யார் சதுரர்' என்று இறைவனைப் பார்க்கிலும் தன்னைச் சமர்த்தர் என்று கூறி இகழ்வது போல நயமாகவே புகழ்ந்து மகிழ்ந்த மணிவாசகரின் மதிநுட்பம் மிகவும் உயர்ந்தது.

அதை சிவ சிந்தையுடன் சுவைத்து மகிழும் பேறு பெற்றவர்கள் மிகுந்த பாக்கிய சாலிகள்.

# ஓர் ஏழையின் ஈர நெஞ்சம்...

தனது சுற்றுப்பயணங்களின் போது ஒருமுறை விவேகானந்தர் ஒரு பட்டணத்திற்குச் சென்றிருந்தார். பெருந் தொகையான முக்கிய பிரமுகர்கள், ஓவியக் கலைஞர்கள், பண்டிதர்கள், தத்துவ ஞானிகள், கலைஞர்கள், கலை விற்பனர்கள் அவரை சூழ்ந்து கொண்டு முடிவில்லாத கேள்விக்கணைகளை அவர் மீது தொடுத்தனர். விவேகானந்தரோ அன்று முழுவதும் அவர்களுக்குப் பதில் அளிப்பதிலேயே நேரத்தைக் கழித்துக் கொண்டிருந்தார்.

ஒரு மூலையில் நின்று கொண்டிருந்த தாழ்ந்த குல குடிமகன் ஒருவன் இறுதி ஆக விவேகானந்தரின் காலில் விழுந்து வணங்கும் பாக்கியத்தைப் பெற்றான். எதனை வேண்டி அவன் வந்திருப்பதாக அவர் கேட்டார்.

'சுவாமி உங்களுக்குப் பசியாக இருக்கும். நான் கொஞ்சம் பசுப்பால் கொண்டு வரவா? நான் தயாரித்திருப்பதை உங்களுக்கு உட்கொள்ள பிரியமில்லாவிடில் சிறிது மாவு கொண்டு வருகிறேன் சப்பாத்தி நீங்களாகவே போட்டுக் கொள்வீர்களா? ஒருவருமே உங்களது உணவைப்பற்றி அக்கறை எடுக்கவில்லையே என்று கேட்டான்.

அவனிடம் தெய்வீகப் பரிசான பிரேமை நிறைந்திருந்தது. பழைய சாஸ்திர நூல்கள் கொண்ட நூலகத்தில் நிறைந்திருக்கும் அறிவிலும் அதுவே மிகப்பிரயோசனமானது,

ஞா. குகஞானி

# அந்த ஆறு பேர்

மனிதன் லௌகீக வாழ்க்கை வாழ்வு தோடு மட்டும் திருப்தியடைவதில்லை. ஆன்மீக வாழ்க்கையும் வாழ விரும்புகிறான்; வாழ்ந்து ஆண்டவனை அடைய விரும்புகிறான்.

நமது லௌகீக வாழ்க்கைக்கு ஆறுபேர் உதவுகிறார்கள்,

அவர்கள்தாம், முறையே தாய், தந்தை, சகோதரர்கள், நண்பர்கள், மனைவி, பிள்ளைகள், அதே மாதிரி ஆன்மீக வாழ்க்கைக்கும் ஆறுபேர் உதவுகிறார்கள்.

முதல் உதவியாளர் சத்தியம், ''சத்தியம் மாதா'' என்கிறது ஒரு மகாபாரத சுலோகம். ஆனால் சத்தியம் மாதாவைவிட உயர்ந்தது, ஆண்டவனையும் விட உயர்ந்தது,

சுந்தரர் சிவபெருமானின் நெருங்கிய நண்பர்தாம், இருந்தும், அவர் சங்கிலிநாச்சியாருக்குக் கொடுத்த வாக்கை மீறியதால் கண்ணை இழக்கின்றார். இதைமாற்ற சிவபெருமானாலும் முடியவில்லை. ''வேண்டுமானால் ஒருஊன்று கோல் தருகிறேன்'' என்றார்.

அடுத்த உதவியாளர் ஞானம். 'ஞானம் பிதா' என்றது அந்த சுலோகம்.

ஆழம், அகலம், நுட்பம் இந்த மூன்றும் இருந்தால் தான் ஞானம்;

தர்மம் மூன்றாவது உதவியாளர், நம் சகோதரர்களைப் போல நம் கூடவே வருவது தர்மம் என்று சுட்டிக் காட்டத்தான். 'தர்மம் பிராதா'' என்று சொல்லுகிறது அந்த சுலோகம்;

இராமன் காட்டுக்குச் சென்றபோது, தருமமும் கூடவே சென்றது என்று வெகு அழகாக வர்ணிக்கிறார் கம்பர். ''அழைக்கின்ற விதி முன் செல்ல, தருமம் பின் இரங்கி ஏக'' என்கிறார்.

அடுத்த உதவியாளர் தயை, அதாவது கருணை, இது நண்பர்களைப் போல உதவுகிறது அதனால் தான் ''தயா சகா'' என்கின்றது சுலோகம்;

ஐந்தாவது உதவியாளர் சாந்தி, அதாவது மன அமைதி. லௌகீக வாழ்க்கையில் மனைவி எத்தனை முக்கியமோ, அத்தனை முக்கியம் ஆன்மீக வாழ்க்கையில், மன அமைதி,

அதனால் தான் ''சாந்தி பத்தினி'' என்றது அந்த பாரத சுலோகம்.

கடைசியாக, நம் பிள்ளைகளைப் போல உதவுவது க்ஷமா, அதாவது பொறுமை ''அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல'' நமக்குப் பொறுமை வேண்டும்;

அதனால்தான் ''க்ஷமா'' புத்திரன்' என்று முடிகிறது அந்த பாரத சுலோகம்.

— புலவர் சிதம்பரம் சுவாமிநாதன் —

# அம்பிகையின் அருள் பெற்ற அருட்கவிஞர்

நாரத முனிவர் இடைவிடாது ஒரே ஒரு தொழில் செய்து வந்தார் என்றால் அது நாராயண மந்திர ஜெபமாகும். அது போல வாழ்நாள் முழுவதும் கவிபாடி முன்னூறுக்குமேற்பட்ட நூல்களை எழுதியபெருமை சமீபத்தில் சமாதி அடைந்த கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்களையே சாரும்.

இவர் சிவகங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது தாய் மாமனார் பெரிய வியாபாரியார். இவருக்குக் குழந்தைகள் இல்லாமையாலே பெற்றோரால் சுப்பிரமணி என்று செல்லமாக அழைக்கப்பட்ட சுத்தானந்தரை ஐந்து வயதிலேயே தத்து எடுத்து வளர்த்து வந்தார். மாமனாருடைய வீடு மதுரையில் உள்ளது. மீனாட்சிஅம்மையின் கோயிலில் இருந்து சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் உள்ளது.

ஒரு நாள் சுத்தானந்தருக்கு ஏழு வயதிருக்கும். மாமனார் மணி, நீ யாருடைய பிள்ளை? என்றார். 'நான், மதுரை மீனாட்சியினுடையபிள்ளை' என்றார். மணிநீ என்னுடைய பிள்ளையென்று ஒரு முறை சொல்லு இந்த வீடு இந்தப் பெரிய வாகனம் எல்லாம் உனக்கே சொந்தம் என்று கூறினார்.

உதுமீனாட்சி தந்த பிச்சை என்று குழந்தை கூறியது.

அப்படியானால் நீ மீனாட்சியிடமே சென்றுவிடு இங்கு இருக்க வேண்டாம், என்று செல்லமாககண்டித்துவிட்டு மாமனார் கடைக்குச் சென்று விட்டார். குழந்தை தனிமையில் இருந்து யோசித்தது. ஓ! நான் மீனாட்சியினுடைய குழந்தைதானே! மீனாட்சியிடமே செல்ல வேண்டுமென்ற எண்ணம் தூண்ட மீனாட்சி அம்மையின் சந்நிதியை நோக்கிச் சென்றது. அம்பிகையின் சந்நிதி திறந்திருந்தது. மக்கள் கூட்டம் குறைந்திருந்த நேரம்.

அம்பிகையைக்கண்ட குழந்தை அம்மா! உன்னைத் தேடி வந்துவிட்டேன். என்னைக் கைவிட்டு விடாதே என்று சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கியது. அரை மணித்தியாலத்திற்கு மேலாகக் குழந்தை தன்னை மறந்தே படுத்துக்கிடந்தது. யாரோ ஒரு அன்பர் குழந்தையைத் தூக்கி நிறுத்தினார். குழந்தை அம்பிகையை பேரொளியாக கண்டது

## ஆத்மஜோதி-நா-முத்தையா

உடனே குழந்தையின் வாயிலிருந்து ஒரு கவி பிறந்தது;

'' அம்மா பரதேவி தயாபரியே
சும்மா உலகின் சுமையாக இரேன்
எம்மாத்திரம் முன் பணியிங்குள்ளதோ
அம்மாத்திரம் வைத்தடி சேர்த்தருள்
வாய் ''

என்பதே அப்பாடல். ஞானசம்பந்தக் குழந்தை இறைவனை முதன் முதலில் அனுபவித்ததோடுடைய செவியனாக விடைஏறியாக, தூவெண்மதி சூடியாக, காடுடையசுட


லைப்' பொடி, பூசியாகக் கண்டது. எல்லா வற்றிற்கும் மேலாகத் தன்னுள்ளங்கவர்ந்த கள்வனைக் கண்டது.

ஆனால் சுத்தானந்தக் குழந்தையோ, தான் உலகத்திற்குப் பாரமாக இருக்க மாட்டேன் என்றும் பணிசெய்யத் தன்னை ஆளாக்கி விட வேண்டும் என்றும் அம்பிகையிடம் வேண்டுகோள் விடுத்தது. அன்று தொடக்கம் குழந்தை பாடிக்கொண்டே இருந்தது

95 ஆண்டுகள் வாழ்ந்த சுத்தானந்தர் 88 ஆண்டுகள் கவி பாடினார் என்றால் அதில் மிகை ஏதும் இல்லை. ஐம்பதினாயிரம் கவிகளுக்கு மேலாக எண்ணிக்கை உடைய பாரத சக்தி மகாகாவியத்திற்கு தமிழ் நாட்டரசு ஒரு லட்சம் ரூபா சன்மானம் அளித்து பட்டமும் கொடுத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தான் கௌரவித்தது.

அவர் ஒருபன்மொழிப் புலவர். இந்திய மொழிகள் பலவற்றை அறிந்திருந்ததோடு பிரான்சிய மொழியிலும் ஆங்கிலத்திலும் நூல் எழுதும் வல்லமையையும் பெற்றிருந்தார். பிரான்சிய மொழியிலிருந்து 'ஏழைபடும்பாடு', 'இழிச்சவாயன்' என்றஇருநூல்களை மொழிபெயர்த்துள்ளார். யோகசாஸ்திர நுட்பங்களை எல்லாம் அறிந்திருந்ததோடு அவற்றைச் சாதனையிலும் கண்டார். வள்ளுவருடைய குறள் போன்ற பாக்களால் யோகசித்தி என்ற நூலை எழுதியதோடு அதற்கு அவரே உரையும் எழுதியுள்ளார்.

சிறிதும் பெரிதுமான நூல்கள் முன்னூறுக்கு அதிகமாக அவரால் எழுதப்பட்டன. அவருடைய நூல்கள் மாத்திரமே ஒரு வீட்டு வாசிகசாலையை அலங்கரிக்கப்போதுமானவை. அடியேன் அவருடைய அத்தனை நூல்களையும் கொண்டு ஒரு தனியான வாசிகசாலை அமைத்து 'சுத்தானந்த நூலகம்' என்ற பெயரிட்டிருந்தேன். இந்த நூலகம் ஆத்மஜோதி நிலையத்தில் இருந்தது. சுவாமிகள் இரண்டு வாரங்கள் அடியேனுடன் ஆத்மஜோதி நிலையத்தில் தங்கி இருந்தார்கள். அவர் இருந்த அறையில் இரவு முழுவதும் ரைப் அடிக்கும் சத்தம் கேட்கும். விடிந்தால் ஒரு நூல் அச்சேற ஆயத்தமாக இருக்கும்.



இரவில் அவர் எங்களைப் போல் தூங்குவதில்லை. பத்மாசனத்தில் தியானத்தில் இருப்பார். தியானம் கலைந்தவுடன் ரைப் அடிக்கும் சத்தம் கேட்கும். பிரதான உணவு பால், பழம், பிரதானமாக பேரீச்சை, எப்பொழுதாவது இட்டலி, உப்புமா உண்ணுவார். பெரும் பாலும் அடுப்பில் ஏறாத உணவே அவருடைய உணவாகும்.

பகவான் ரமணமகரிஷிகளோடும், பகவான் அரவிந்தரோடும் நிறைந்ததொடர்புடையவர். அவர்கள்இருவருமே அவருடைய ஆத்மீக குருமார் என்பதை அவர் எழுதிய நூல்கள் வாயிலாக நாம் அறியலாம். அவருக்குப் பக்கத்திலே இருந்து உரையாடும் போது ஒரு குழந்தையுடன் உரையாடுவது போன்ற ஒரு உணர்வு நம்மிடத்தே ஏற்படுவதைக் காணலாம் மூன்று வயதுக் குழந்தைகள் முதல் பெரிய ஞானிகள் வரை அறிந்துகொள்ள வேண்டிய பலதரப்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களுடைய ஆராய்ச்சிக்கும் முதுமாணி பட்டம் பெறுபவர்களுடைய ஆராய்ச்சிக்கும் அவர்எழுதிய நூல்கள் பலகோணங்களில் ஈடுகொடுக்கக்கூடியவை. தனது வாழ்க்கைச் சரித்திரத்தை 'ஆத்மசோதனை' என்ற பெயரில் எழுதியுள்ளார்.

# சித்தாந்த மரபு



சித்தாந்தக்கல்வி மூன்று நிறுவன அமைப்பு நிலைகளினூடாக வளர்ச்சி பெற்றது. ஒன்று நல்லாசிரியரிடத்துக் குருகுல வழியாகக் கல்வி பெறல். மற்றையது சித்தாந்தப் பல்கலைக்கழகங்களாக விளங்கிய மடாலயங்கள் வழியாகக் கல்வி பெறல். மூன்றுவதாக ஆலயங்கள் வாயிலாகக் கல்வியறிவு பெறல்.

தத்துவ ஆய்வு, ஒழுக்கவியல், சித்தாந்த தருக்கம், வழிபாட்டு முறைமை என்ற புலன்களை உள்ளடக்கியதாகச் சித்தாந்தக் கல்வி வளர்ந்தது. சிவம் என்பதை முழுமுதற் பொருளாக விளக்குதல் சைவசித்தாந்தக் கல்வியிற் சிறப்பிடம் பெற்றது. 'சித்து' என்பது ஞானம் என்னும் ஆற்றலை விளக்குகின்றது. அந்தம் என்பது 'நிறைவு' என்றும் கொள்ளத்தக்கது. நிறைவான ஞானத்தை நோக்கிய வழியே 'சித்தாந்தம்' என்று பொருள் கொள்ளுதல் பொருத்தமானது. அதாவது, முடிவான உண்மைகளை விளக்கும் நெறியே சித்தாந்தம் என்பது பாரம்பரியமான விளக்கம். அந்தம் என்பது முடிவு என்ற அடிப்படையில் இந்த வரையறை தரப்படுகின்றது.

சித்தாந்தக் கல்வியானது தனக்கென உரிய தருக்க முறைமை கொண்டு விளக்கப்படுகின்றது. ஆனால் ஆரம்ப நிலையிலே மாணவருக்குத் தருக்கம் கற்பிக்கப்படவில்லை. அடிப்படை அறிவைக் குருகுலத்தில் அல்லது திண்ணைப் பள்ளிக்கூடங்களிற் கற்றபின்னரே தருக்கம் அறிமுகம் செய்யப்பட்டது.

தருக்கக் கல்வி கருத்து அளவைக் கல்வி என்றும் குறிப்பிடப்பட்டது. காட்சி, கருதுதல், உரை என்ற மூன்று கருத்து அளவைகள் பயன்படுத்தப்பட்டன. ஐந்து புலன்களும் அறியப்பட்டு உள்ளத்திலே தொகுக்கப்பட்ட படம், 'காட்சி' எனப்பட்டது. கருதுதல் என்பது ஊகங்கள் வழியாகப் பெறப்படும் முடிவு. உதாரணமாக, ஒருவன் நல்ல நெல் மணிகளைக் கொண்டுவந்தால் அவனது வயல் வளமுள்ளதென்றும், செய்கை பண்பட்டதென்றும் கொள்ளுதல் 'கருதுதல்' என்பதாகும். ஆதாரங்கள் கொண்டு, கருத்துக்களைச் சீர்தூக்கிப் பார்த்து உண்மைகளைக் கண்டறிதல் 'உரை' எனப்பட்டது. உரை என்பது ஆய்வு.

சைவசித்தாந்தக் கல்வி மாணவரின் உடல், உள விருத்திகளோடு இணைந்திருந்தது. மாணவரது விருத்திக்கேற்றவாறு படிநிலைகளாகப் பாடத்திட்டம் அமைக்கப்பட்டது. தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றை நோக்கிச் செல்லும்வண்ணம் கல்விச் செயற்பாடுகள் இணைந்திருந்தன. முப்பொருள் உண்மைகளை விளங்குதல் ஆரம்பக்கல்வியை நிறைவேற்றும் பொழுது ஒரு மாணவர் அடையப்படவேண்டிய தலையாய இலக்காக அமைந்தது.

பதி, பசு, பாசம் என்பவை முப்பொருள்களாகும். இறைவனது பண்புகள் 'பதி' என்ற எண்ணக்கருவால் விளக்கப்பெற்றன. அருவம், உருவம், அருவுருவம் என்ற திருமேனிகளாற் பதியின் பண்புகள் குறித்துரைக்கப் பெற்றன. ஆரம்பக்கல்வியில் இறைவனது உருவத்திருமேனிகளை மாணவர் அறிந்து கொள்வர். அறிவு முதிர்ச்சி பெற, அருஉருவம், அருவம் பற்றிய எண்ணக்கருக்கள் கற்பிக்கப்படும். இறைவனது பேராற்றல் எண் குணங்களினூற் சைவசித்தாந்தக் கல்வியில் விளக்கப்பட்டது. இயல்பாகவே பாசங்களிலிருந்தும் நீங்குதல், தம்வயத்தராதல், முடிவிலா ஆற்றலுடைமை தூய உடம்பினராதல், பேரருளுடைமை, வரம்பிலா இன்பமுடைமை, இயற்கை உணர்

சித்தாந்தக் கருத்துக்களை வலியுறுத்தும் திருமுறை ஓதுதலும் ஆலயங்களிலே இடம்பெற்றன. பிற்காலத்தில் புராணபடனம் ஓதும் நிகழ்ச்சிகளும் ஆலயத்திலே அமைக்கப்பட்டன. இவையாவும் சைவப் பாரம்பரியத்திற் காணப்பட்ட முறைசாராக்கல்வி நிகழ்ச்சிகளாக அமைந்தன. பண்பாட்டு வளர்ச்சி கொண்ட சமுதாயங்கள் தமக்கென உரிய முறைசாராக்கல்வி ஒழுங்கமைப்பை விருத்தி செய்தமைக்கு இது ஒரு பொருத்தமான எடுத்துக் காட்டாகும்.

வினராதல், முற்றுமுணர்தல் முதலியவை எண்குணங்களாகும்.

இத்தகைய பண்புகளைக் கொண்ட இறைவன் ஐந்தொழில்களைப் புரிவதாக சைவசித்தாந்தம் விளங்கும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவை ஐந்தொழில்களுமாகும்.

பதிக்கு அடுத்தபடியாக விளக்கப்படும் பொருள்களாக பசுவும், பாசமும் அமைகின்றன. பசு என்பது ஆன்மா எனப்படும். பாசம் என்பது ஆணவம், கன்மம் மாயை என்ற மூவகைப்படும். ஆன்மா ஆணவத்தோடு பிணிக்கப்பட்டிருக்கும் நிலை அறிவற்ற நிலையாகும். அது 'அசத்து' எனப்படும். ஆன்மா ஆணவத்திலிருந்து முற்றாக விடுபடாத, ஆனால் விடுபட எத்தனிக்கின்ற நிலை அறிவுள்ள நிலையும் அறிவற்ற நிலையுமாகும். இந்நிலை 'சதசத்து' எனப்படும். ஆன்மா இறை அருளிலே மூழ்குதல் 'சுத்தநிலை' என்று கூறப்படும்.

ஆன்மாவைப் பற்றும் ஆணவம் 'மூலமலம்' ஆகும். ஊழ்வினை பற்றிய கருத்துக்கள் கன்மம் என்ற பிரிவிலே கற்பிக்கப்பட்டன. மாயை என்பது வெளித்தோன்றும் பண்புடையதாக சைவசித்தாந்தக் கல்வியிற் கூறப்படுகின்றது. இவை தொடர்பான விரிவான ஆய்வுகள் சைவசித்தாந்தப் பல்கலைக் கழகங்களாலே மடாலயங்களில் இடம்பெற்றன.

மடாலயங்களில் வேதங்கள், ஆகமங்கள், சைவசித்தாந்த தோத்திரங்களாகிய திருமுறைகள், சந்தான குரவர்களது நூல்கள் முதலியன ஆய்ந்தறியப் பெற்றன. விரிவுரை, வினாவிடை கண்டறி முறை முதலிய முறையியல்கள் உயர் கல்விப் பீடங்களாகிய மடாலயங்களிலே மேற்கொள்ளப்பட்டன. மெய்ப்பொருளைத் தேடும் ஆய்வுகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டது.

## சமயமும் கல்வியும் — 5

சைவக்கல்வியிற் கோயில்கள் சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றன. ஆகம வடிவான கல்வி கோயில்களிலே நடைபெறுவதற்குரிய ஒழுங்கமைப்புக் காணப்படுகின்றது. கோயில்கள் விக்கிரகங்கள் முதலியவற்றின் வடிவமைப்பு, வழிபாட்டு முறைமை, பூசைக்கிரமம், அபிடேகம் முதலியவை ஆகமங்களிலே விளக்கப்பெற்றுள்ளன.

சமூக வளர்ச்சியின் ஒரு பிரதான பண்புக்கூறாக அமைவது சமூக நிறுவனங்களின் தோற்றமாகும். நிலமானிய சமூக அமைப்பில் மிகப் பலம்வாய்ந்த சமூக நிறுவனமாகக் கோயில்கள் வளர்ந்தமைக்குக் காரணங்கள் பலவுள. குறித்துரைக்கப் பெற்ற தொழில்களை யார் யார் மேற்கொள்ளல் வேண்டுமென்ற வரையறையும், கட்டுப்பாடும் நிலமானிய சமூக அமைப்பிலே காணப்பட்டது. இந்தக் கட்டுப்பாடுகளை நிலை நிறுத்தி ஒழுங்கமைப்பைப் பேணக்கூடிய ஆற்றலின் வடிவ

சைவசித்தாந்தக் கல்வியானது அறிவு, அனுபவம் என்ற பிரமாணங்களைக் கொண்டு விளங்குவதால், வாழ்க்கையை எவ்வகையிலும் விட்டுப் பிரியாத தத்துவம், நடைமுறை என்பனவற்றோடு இணைந்து நிற்கின்றது நடைமுறையிலிருந்து தத்துவத்துக்கு வருதலும், தத்துவத்திலிருந்து நடைமுறைக்குச் செல்லுதலுமான இந்த நிகழ்ச்சியின் பலத்தால், அந்நியர் ஆட்சியின் பொழுது கோயில்கள் இடிக்கப்பட்ட வேளை சைவசமயம் சாயாத குன்றாக நின்றது. இந்த வரலாற்று நிகழ்ச்சியை விளங்கிக் கொள்வதற்கு சித்தாந்தக் கல்வி மரபு பற்றிய ஆய்வு துணை செய்கின்றது.

மாக ஆலயங்கள் அமைக்கபட்டன. சிற்பங்களின் வடிவமைப்பு, நடனங்களின் வடிவமைப்பு, இசைக்கோலங்கள் என்றவாறு ஆலயக் களத்திலே காணப்பெற்ற அழகு வடிவங்களுடனும் மேற்கூறிய பண்பு இணைந்திருந்தது வகுக்கப்பட்ட எல்லைகளோடு இணைந்து செல்கின்ற கல்வியும் கலையாக்கங்களும் இடம் பெற்றன.

பெரும் கலைச்செல்வங்களை உண்டாக்குவதற்கு சமூக முரணுரைகள் வலுவளித்தன. நடராஜர் சிலை, நாககுரக்கலை, பரதக்கலை, கருநாடக இசை முதலியவை முரணுரைகளின் விசைகளால் கோயில் நிறுவன அமைப்புக்களிலே வளர்ச்சியடைந்த உலகம் நயக்கும் கலை வடிவங்களாகின சித்தாந்தாந்தக் கல்வி மரபு உலகுக்கு வழங்கிய கலைச்செல்வங்கள் என்று இவற்றைக் குறிப்பிடலாம். சமூக முரணுரைகளின் மறுபக்க வளர்ச்சிகளாக நாட்டார் கலைகளும், நாட்டார் தெய்வ வழிபாடுகளும் அமைந்தன.

சித்தாந்தக் கருத்துக்களை வலியுறுத்தும் திருமுறை ஓதுதலும் ஆலயங்களிலே இடம் பெற்றன. பிற்காலத்தில் புராணபடனம் ஓதும் நிகழ்ச்சிகளும் ஆலயத்திலே அமைக்பட்டன இவையாவும் சைவப் பாரம்பரியம் காணப்பட்ட முறைசாராக் கல்வி நிகழ்ச்சிகளாக அமைந்தன. பண்பாட்டு வளர்ச்சி கொண்ட சமுதாயங்கள் தமக்கென உரிய முறைசாராக்கல்வி ஒழுங்கமைப்பை விருத்தி செய்தமைக்கு இது ஒரு பொருத்தமான எடுத்துக்காட்டாகும்.

ஆலயம் என்ற நிறுவனத்தோடு அவையையும் இணைப்பதற்கான கருத்தேற்றக் கற்பித்தல் முறையும் சித்தாந்தக்கல்வி மரபிற் காணப்பட்டது.

'கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக் கால்களாற் பயன் என்' என்பது அப்பர் வேண்டுகோள்.

---

**சபா ஜெயராசா**

---

சைவசித்தாந்தக் கல்வியானது அறிவு, அனுபவம் என்ற பரிமாணங்களைக் கொண்டு விளங்குவதால், வாழ்க்கையை எவ்வகையிலும் விட்டுப்பிரியாத தத்துவம், நடைமுறை என்பவற்றோடு இணைந்து நிற்கின்றது நடைமுறையிலிருந்து தத்துவத்துக்கு வருதலும், தத்துவத்திலிருந்து நடைமுறைக்குச் செல்லுதலுமான இந்த நிகழ்ச்சியின் பலத்தால், அந்நியர் ஆட்சியின் பொழுது கோயில்கள் இடிக்கப்பட்டவேளை, சைவ சமயம் சாயாத குன்றாக நின்றது. இந்த வரலாற்று நிகழ்ச்சியை விளங்கிக் கொள்வதற்கு சித்தாந்தக் கல்வி மரபு பற்றிய ஆய்வு துணை செய்கின்றது.

எத்தகைய சமூகக் களத்திற் சித்தாந்தக் கல்வி தோன்றி வளர்ந்தது என்பதை ஆராய்தல், சமயக்கல்வியை விளங்கிக்கொள்வதற்கு வழியமைக்கும் அனுபவங்களைக் கருத்துருவமாக்கும் செயற்பாடு சித்தாந்தக் கல்வியில் வெகு இயைபாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

— தொடரும்

# ஆத்மஞானம் பெற

ஒரு முனிவரிடம் ஒருயுவன் வந்து சேர்ந்தான்.

அவரிடம் சிஷ்யனாகச் சேர்ந்து ஆத்மஞானம்பெற வேண்டும் என்பது அவன் ஆசை.

அவனை அவர் எதிரேயுள்ள நதியில் போய் ஸ்நானம் செய்து விட்டு வரும்படி சொன்னார்,

அவர் அப்பால் சென்றதும், முனிவர் ஆசிரமத்து வேலைக்காரியைக் கூப்பிட்டு, ''அந்த யுவன் திருப்பி வரும் பொழுது நீ அவன் மேல் தூசிபடும்படியாகப் பெருக்கு'' என்று சொன்னார்,

அவளும் இசைந்தாள்:

சுத்தமாக ஸ்நானம் செய்து விட்டுத் திரும்பிய அவன்மீது வேலைக்காரி பெருக்கிய தூசி பட்டதும், யுவனுக்கு மிக்க கோபம் வந்தது.

உடனே வழியில் கிடந்த ஒரு சுழியை எடுத்துக் கொண்டு அவளை அடிக்க ஓடினான்,

ஆனால் அந்த வேலைக்காரி இவனுக்கு மேல் வேகமாக ஓடி எங்கோ மறைந்தாள்,

யுவன் மீண்டும் நதிக்குச் சென்று ஸ்நானம் செய்துவிட்டு, முனிவரிடம் வந்தான்,

முனிவர் அவனைப் பார்த்து, ''இன்னும் ஒரு வருஷம் கழித்து வா. அதுவரை பகவந் நாமஜபம் செய்'' என்றார்,

அடுத்த வருஷம் யுவன் திரும்பி வந்ததும், முனிவர் அவனை ஸ்நானம் செய்து விட்டு வரச் சொன்னார்,

அவன் அப்பால் சென்றதும், வேலைக்காரியைக் கூப்பிட்டு, இந்தத் தடவை விளக்குமாறு அவன் காலில் படும் படியாகப் பெருக்கு'' என்றார்,

அவள் அப்படியே செய்தாள்.

ஆனால் இந்தத் தடவை யுவன் அவளை அடிக்கவில்லை. ஆனால் அவளைக் கண்ணபின்னவென்று வைதான்,

பிறகு நதிக்குச் சென்று, மீண்டும் ஸ்நானம் செய்து விட்டு முனிவரிடம் வந்தான்,

முனிவர் அவனைப் பார்த்து, ''உனக்கு இன்னும் பக்குவம் வரவில்லை. ஒரு வருஷம் கழித்து வா. அதுவரை நாமஜபம் செய்'' என்று சொன்னார்,

யுவன் அடுத்த வருஷம் வந்தான், ஸ்நானம் செய்து விட்டுத் திரும்பினான்.

அப்பொழுது வேலைக்காரி, முனிவர்முன் கூட்டியே அவளுக்குச் சொல்லிக் கொடுத்திருந்ததுபோல, கூடையில் இருந்த அத்தனை குப்பையும் அவன் தலையில் கொட்டினாள்.

இந்தத் தடவை யுவன் அவளை அடிக்கவுமில்லை, திட்டவுமில்லை,

அதற்குப் பதில் அவள் காலில் விழுந்து அவளை நமஸ்கரித்தான். ''தாயே! நீதான் எனக்குக் குரு: என்மீது உனக்குள்ள கருணையே கருணை! உன்னால் தான் என் அகந்தையும் கோபமும் போயின'' என்றான்.

யுவன் மீண்டும் நதிக்குச் சென்று ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பினான்,

அவனைக் கண்டதும் முனிவர் அவனை ஆலிங்கனம் செய்து கொண்டார், ''ஆத்மஞானம் பெற நீ அருகதை ஆகிவிட்டாய் இனி நீ என் சீடன்'' என்றார். (''சந்த் வாணி'' என்னும் இந்தி நூலிலிருந்து எடுத்தது.)

# அருகதை வேண்டாமா?

# கட்டுடை சித்தி விநாயகர்

சிவபெருமான் எழுந்தருளிய அருள் வடிவங்களுள்ளே சைவசமயத்தவரால் முதலாக வைத்துப் போற்றப்படும் வடிவம் விநாயகவடிவமேயாகும். சைவசமயிகள் எத்தொழிலைச் செய்யத் தொடங்கும்போதும் விநாயகக் கடவுளை வழிபட்டு வருகின்றனர். விநாயகக் கடவுளை வழிபட்டுத் தொடங்கும் எக்கருமமும் இடையூறு நீங்கி இனிது முடியும். இவ்வாறு தம்மைமெய்யன்போடு வழிபடும் அடியவர்க்கருளும் வண்ணம் பிள்ளையார் இலங்கையிலுள்ள பலதலங்களில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கின்றார்,

அவற்றிலே விநாயகப்பெருமான் யாழ்ப்பாணத்திலே மானிப்பாயைச் சேர்ந்த கட்டுடையிலுள்ள புதருளைப்பதியிலும் வீற்றிருந்து அடியவர்க்கு அருள் பாலித்து வருகின்றார். திருப்பதிப் பெயர் புதருளை என்பது. ''மானி மருதிற் புதருளைவான்பதியில் ஞானக்கொழுந்தாய் நயந்தானை'' என்பதனாலும் வலியுறுதல் காண்க. தலவிருட்சம் அரசு- அரச தலவிருட்சமாதலின் அரசடிப்பிள்ளையார் என்றே எல்லோரும் அன்றும் இன்றும் வணங்கி வருகின்றனர். இன்னும் இரணைவட்டுக் களையுடைய தென்னையொன்று இத்தலத்திலே நின்றகாரணத்தால் சிலகாலமாக இரணைவட்டு பிள்ளையார் கோயில் என்றும் வழங்கப்பட்டது.

எம்பெருமானுக்குச் சித்தி விநாயகர் என்ற பெயர் சிறப்புப் பெயராகும்,

''விண்ணோங்கு புதருளைப்பதியில் நாளும்
மேவு சித்தி விநாயகரே யாடீருஞ்சல்''

என்றும்

''வீதிமலி புதருளைப்பதியில் நாளும்
மேவு சித்தி விநாயகரே யாடீருஞ்சல்''

என்றும் சோமசுந்தரப்புலவர் கூறுமாற்றன் அஃது அறியப்படும். சித்திவிநாயகர் என்பது விநாயக பெருமானுடைய அருள் வடிவங்களுள் ஒன்றாகும். இம்மைக்கும் மறுமைக்குமுரிய எல்லாச் சித்திகளையும் அருளவல்ல விநாயகர் என்பது பொருள். வீரகத்தி விநாயகர் என்பதும் அப்பெருமானுடைய அருள்வடிவங்களுள் ஒன்றாகும் எமக்கு உட்பகையாயிருந்து எம்மைத் தீமையில் அழுத்தும் தீக்குணங்களை நீக்கி எம்மிலே அருட்குணங்களை வளர்த்து எமக்குத் திருவடிப்பேறு தருபவர் என்பது பொருளாகும். ஏறத்தாழ நானூறு ஆண்டுகட்கு முற்பட்டதென்று பலர் கூறுவர்.

செல்வன். ப. நிமலன்

தற்போது ஆலயம் இருக்கும் இடத்திற்குச் சற்று தூரத்தில் வீரசத்தி என்பவர் வயல் உழும் போது பிள்ளையார் சிலை ஒன்று கண்டெடுத்தார் என்றும் அதனால் வீரகத்திப் பிள்ளையார் கோயில் என்றும் பெயர் பெறலாயிற்று அச்சிலையை தெற்பைப் புல்லும் புன்னைமரங்களும் நின்ற இடத்திலே ஓர் அரச மரத்தின் கீழ் தன் சக்திக்கேற்ப பிரதிட்டை செய்து வந்தான் ஒரு மூதாட்டி பின் அவருடன் சேர்ந்து மக்களும் வழிபடத் தொடங்கினர் தெற்பை புதர்களிடையே ஆனைவடிவில காட்சி கொடுத்தார் என்றும் கூறுவர்.

ஆண்டுதோறும் பங்குனி உத்தரத் திருநாளை தேர்த்திருநாளாகக் கொண்டு முன் ஒன்பது நாள் விழாவும் பதினோராம் நாளிற் தீர்த்த விழாவும் நிகழ்ந்து வருகின்றது. ஆண்டுத் திருவிழாக்கள் முடிந்த பின்பு வேளாண்மைக்கு ஊறுவராதபடி காத்தளம் பெருமானுக்கு சிறப்பான பொங்கல் செய்து வழிபடுவர்.

இன்னும் அடியார்கள் பக்தியை மிகுவிக்கும் திருத்தொண்டர் புராணத்தைப் படித்துப் பயன் சொல்லும் வழக்கமும் இத்தலத்திற் பல்லாண்டுகளாக இருந்து வந்தது,

இத்தலத்திலே மகோற்சவத்தை விட சதுர்த்தி, தைப்பூச மணவாளக் கோலவிழா, சிவராத்திரி, சித்திராபூரணை விழா, நவராத்திரி, பிள்ளையார்கதை, திருவெம்பாவை, தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி தினங்களில் விசேட ஆராதனை என்பனவும் நடாத்தப்பட்டுவருகின்றன. ★



தங்க வைர நகை
வியாபாரம்!

தங்கப் பவுண்
வைர நகைகள்

எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்

ஓடர்கள் குறித்த தவணையில் சிறந்த முறையில்
செய்து கொடுக்கப்படும்.

கே. கே. வி யாழ்ப்பாணம் நகைமாளிகை
82/4 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
தொ. பே: 021 - 22362

மருதடி விநாயகா தேரேறி வருக!
குளிர்பானங்களை இனிமையாகப் பருகிட

நாட வேண்டிய இடம்:-

லிங்கம் கூல் பார்
(வெலிங்டன் சந்தி)

52, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

தொல்லியல்

# ஒலியில் உதித்த ஒளி

— இரா. நாகசாமி

எங்கும் கார் இருள். இரவின் பின் யாமம்' உலகே இருண்டு எல்லா உணர்வுகளும் அடங்கி உயிர்த்துடிப்பு மட்டும் கேட்டுக் கொண்டிருப்பது போன்ற பிரமை, அந்த நிசப்தமான நிலையில் மெல்ல மெல்ல அடிகள் எடுத்து வைக்கும் ஒலி. இனம் தெரியாத ஓர் உணர்வு அலை எழுந்தது. அந்த அலையை அதிகரிக்கச் செய்வது போன்ற ராகத்தில் – என்று சொல்வதைக் காட்டிலும் மெல்லிய பண்ணில் –'உன்னடிக்கே போகின்றேன்'' என்ற பாடல் ஒலி, மெல்ல மெல்லத் தேய்ந்து உள்ளே செல்கிறது. அவ்வொலி திடீரென நின்றதை உணர்ந்தேன்.

அதே சமயம் ஒரு பேரொளி வெளிப்பட்டது. இருளை ஒளி மயமாக்கும் அவ்வொளி உள்ளத்துள் வெளிப்பட்டது; என் மனதில் மட்டும் தான் இப்படித் தோன்றியதோ எனச் சுற்றிப் பார்த்தேன். என் போல் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அங்கு நின்று கொண்டிருப்பதைக் கண்டேன். அங்கு ஆண்கள் இருந்தனர், ஏராளமான பெண்கள் இருந்தனர், இளம் சிறுர்கள் இருந்தனர். அத்துணை பேரும் கூப்பிய கையராய், அதே உணர்வில் அவ்வொளியைக் காண்பதைக் கண்டேன்.

## திருப்புகலூர் ஆலயத்தில்...

சித்திரை மாதம் சதய நட்சத்திரத்தன்று தஞ்சைமாவட்டம் திருப்புகலூர் அக்னிபுரீஸ்வரர் ஆலயத்தில் அப்பர் பெருமான் முக்தியடைந்ததைக் காட்டும் திருவிழாவில் இந்த உணர்வு எனக்கு ஏற்பட்டது.

'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே' என்று அப்பர் பெருமான் பாடிக் கொண்டே சிவமாகிய பெருவொளியில் ஐக்கியமானதைச் சித்திரிக்கும் காட்சி.

அப்பர் திருவுருவப் படிமத்தை அலங்கரித்து அவர் பாடிய பத்து இறுதிப் பாடல்களைப் பாடிக்கொண்டே கர்ப்பக் கிருஹத்துக்குள் சென்று பரமனுடன் ஒன்றுவதைத் தீபாராதனையால், பின்னிரவு 3.30 மணியளவில் காட்டும், இந்த விழா ஆண்டு தோறும் மிகச் சிறப்பாக நடத்தப்படுகிறது.

இக் காட்சியைச் சொல்லால் வடிக்க வொண்ணாது; அந்த நேரத்தில் திருப்புகலூர்க் கோயிலின் உள்ளிருந்து காண வேண்டும். வாழ்க்கையில் ஒவ்வொரு கணமும் நம்முணர்வில் அக்காட்சி நிலைத்து நிற்கும்; பக்தியின் உன்னத சிகரம் அப்பர் பெருமானின் விழாவை ஒவ்வொருவரும் சித்திரை மாதம் சதயத்தன்று அங்கு சென்று காணுதல் வேண்டும்,

## அப்பர் திருமேனி

எவ்வளவு காலமாக இவ்விழா இங்கு நடைபெறுகிறது என எண்ணத் தோன்றியது. வரலாற்றில் ஈடுபாடு கொண்ட நான் கல்வெட்டைத் தேடினேன். சிவபக்தியில் சிறந்தவனாக 'சிவபாதசேகரன், என்று மக்களால் போற்றப்பட்டு உலகமே வியக்கும் ஒப்பரும் கோயிலைத் தோற்றுவித்தானே இராஜராஜ சோழப் பெருமன்னன், அவன் காலத்துக்கு முன்பிருந்தே திருப்புகலூர்க் கோயிலில் சித்திரைச் சதயவிழா நடைபெற்று வருகின்றது என்று அவ்வூர்க் கல்வெட்டுகளிலிருந்து அறிந்தேன்.



ஆம், இப்பொழுதும் திருவிழாவில் எடுந்து வரப்படும் அப்பர் சுவாமிகளின் செப்புத் திருமேனி, ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக, தொடர்ந்து ஆண்டு தோறும் உலாவந்தத் திருமேனி என்று அறிந்த போது மனம் மகிழ்ந்தது.

அங்கு இராஜராஜன் காலத்தில் பொற் கோயில் சண்டேஸ்வரயோகி என்ற பெரியவர் இருந்திருக்கிறார். அவருக்கு அக்கினிகுமார க்ரமவித்தன் என்பது இயற் பெயர், அவர் அந்தணர் குலத்தவர், அவர் கி.பி. 1004-ல் திருநாவுக்கரசு தேவருக்கு ஒவ்வொரு சந்தியிலும் திருவமுது படைக்கப் பொற் காசு கொடுத்ததாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

ஓராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெறும் ஒரு விழாவையும் அன்றிருந்த அதே திருமேனி இன்னும் உலாவாக வருவதையும் சித்திரை சதயத்தன்று பார்க்கும் போது 'தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி சங்கர ஜயஜய போற்றி எனக் கூறத் தோன்றியது.

★ ★ ★

# காவியுடை அணிந்த காரணம்..


ஒரு முறை கல்கத்தா நகரின் வீதி வழியே சுவாமி விவேகானந்தா செல்கையில் கனவானைப் போல் உடை அணிந்த ஒருவர் அவரை அணுகி "ஏன் இக் காவியுடையை அணிந்திருக்கிறீர்கள் ஒரு வேளை உலகையும் எல்லா ஆசைகளையும் துறந்து விட்டீர்கள் என்று விளம்பரம் செய்யும் நோக்கமாய் இருக்கலாம். அகங்காரத்தின் ஒரு அறிகுறி என்று கூறினார்.

விவேகானந்தரோ சிரித்து விட்டு "எனதருமை நண்பனே! எனக்கு அவ்வித எண்ணமொன்றும் இல்லை. நான் பணமற்ற ஒரு சந்நியாசி என்று என்னைக் கண்டு விட்டு பிச்சைக்காரர் எவரும் என்னை அணுகவும் மாட்டார்கள். தொல்லைப்படுத்தவும் மாட்டார்கள். அதனாலே இதனை அணிந்திருக்கிறேன். ஒரு வித இடையூறுமின்றி வீதியில் என்னால் நடந்துசெல்ல முடிகிறது.

என்னிடம் பணம் இல்லை. ஆத்மீகப் பொக்கிஷங்கள் உண்டு. அதனை விரும்பி வரும் மக்களுக்கு நான் அளிக்கிறேன் என்றார்.

ஞா. குகஞானி

# மருதடி விநாயகர் மாண்பு



தமிழரசர்கள் யாழ்ப்பாணத்தை ஆண்ட பிற்காலத்தில் மானியம்பதி மருதடி விக்கினேஸ்வரன் தற்போது திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள கர்ப்பக்கிருக மண்டபத்தை ஸ்தானமாகக் கொண்டு ஒரு தபசி தவமிருந்தார். பல அடியார்கள் இவ்விடத்தில் ஒரு மகான் அடக்கம் இருக்க வேண்டும் என்பார்கள்.

தமிழரசர்கள் காலத்தில் இவ்விடத்தில் விநாயகர் ஆலயம் இருந்திருக்கிறது பின்னர் போர்த்துக்கேயர் காலத்தில் அவ்வாலயம் இடிக்கப்பட்டு உள்ளது.

ஆலயத்தின் தெற்கு வீதியில் உள்ள திருக்குளத்தை இவ்வாலயம் கட்டப்படு முன்னரே மக்கள் பிள்ளையார் குளம் என்று அழைத்து வந்தார்கள். இவ்விடத்தில் மருதஞ்சோலை என்று அழைக்கத்தக்கதாய் பூதவ மரங்கள் அடர்ந்தோங்கி வளர்ந்திருந்தன.

போர்த்துக்கேயர்கள் தமது ஆட்சிக் காலத்திலே கிராமங்கள் தோறும் இருந்த கோயில்களை இடித்தனர். அவ்வாலயங்களில் இருந்து தொன்மைமிக்க விலையுயர்ந்த புனிதம் வாய்ந்த விக்கிரகங்களையும், திருவாபரணங்களையும் கொள்ளை கொண்டார்கள். இவ்வாறு அழிபாட்டுக்குள்ளான கோயில்களில் மருதடியில் இருந்த விநாயகர் ஆலயமும் ஒன்றாகும்.

---

**★ சுவாமிநாதன் தர்மசிலன் ★**


---

போர்த்துக்கேயர் இக்கோயிலினை இடித்து இதனை ஒரு சவக்காலை ஆக்கிவிட்டனர். இப்போதுள்ள ஆலயத்தின் கட்டிட வேலைகள் தொடங்கியபொழுது இவ்விடத்தில் மனிதனுடைய எலும்புகள் காணப்பட்டன என்று அறிய முடிந்தது.

போர்த்துக்கேயருக்கு அஞ்சி புறத்தே வேற்று மதத்தவர்களாக நடித்தவர்களும்,

ஏனையோரும் மகான் சமாதி அடைந்த இடத்திலும், மூலஸ்தானத்துக்குக் கிழக்கே உள்ள மருத மரத்தின் கீழும் இராக்காலங்களில் அவர்கள் கண்களில் அகப்படாத நேரங்களிலும் பொங்கலிட்டு பூஜை செய்து விநாயகரை வழிபட்டனர்.

இவ்வாறு பொங்கல் வழிபாடு மறைவாக நடப்பதை மருதடி விநாயகர் பார்த்திருப்பாரோ? இவர்கள் கொடுங்கோன்மையை நாற்பது ஆண்டுகளில் நிலைகுலையச் செய்ய யாழ்ப்பாண அரசு ஒல்லாந்தர் கைக்கு மாறியது.



மூலஸ்தானத்துக்கு அருகாமையில் உள்ள மருத மரத்திலும் வெளிவீதியிலுள்ள மருத மரங்களின் கீழும் மக்கள் உற்சவ காலங்களில் கர்ப்பூரம் எரித்து மருதந்தளிரைப் பறித்துக் கண்ணில் ஒற்றிக் காதில் அல்லது தலையில் அணிவதை இன்றும் கூட நாம் காணலாம். பொங்கல் நாள் தோறும் நடைபெறுகின்றது;

யாழ்ப்பாணத்தில் பல பாகங்களிலும் உள்ள மக்கள் வேளாண்மை அறுவடைக் காலத்தில் முதலிலெடுக்கும் நெற்றானியத்தை "மருதடிப் பிள்ளையார் பொங்கலுக்கு" என்று எடுத்து வைப்பது வழக்கம்.

ஒல்லாந்தர்கள் சமய வெறியில் ஈடுபாடு காட்டாது, பொருள் சேர்ப்பது கருத்தாக இருந்தமையால் பொங்கல், வழிபாடு ஆகியவை மருதடியில் தடையின்றி நடைபெற்றது.

மருத மரத்தின் கீழ்ச்சையில் விநாயகர் சிலையை வைத்துப் பூஜை செய்து வருகின்றார்கள் திருக்கோயில் கட்டி மகோற்சவம் நடத்த உத்தேசிக்கப்பட்டது. மருதமரத்தின் மேற்குத் திசையை நோக்கி கர்ப்பக்கிரகமும் அர்த்த மண்டபமும் கட்டி முடிக்கப்பட்டன. பின்னர் இக்கோயில் மேற்குத் திசையாக மாற்ற வேண்டி இருந்தது. கீழ்த்திசையில் இருந்தால் உற்சவம் நடாத்தப் போதிய இடவசதியின்மையால் இம்மாற்றம் நடைபெற்றது.

# நல்லூர்த் தே

ஈழத்திலே சித்தர் பரம்பரை உருவான நல்லூர்க் கந்தனின் திருக்கோவிலின் தெற்கு வீதியிலே தேர்முட்டிக்கு நேரேயுள்ள ஒரு சிறு வீட்டில் செல்லப்பர் அவதரித்தார். இவர் பிறந்த வீடு சிறு மாற்றங்களுடன் இன்றும் அங்கேயுள்ளது. இவர் துறவியாய் வசித்து வந்த சிறு கொட்டிலும் அவ்வீட்டின் முற்றத்தில் இன்றும் விளங்குகிறது.

'செல்லப்பசுவாமிகள் கறுத்தமேனியர்: தலைமயிரை பரட்டையாக தொங்கவிட்டு நடப்பார், வெறித்த பார்வையர், குறுகிய தாடியர், கந்தை துணியணிவான், நீறு மணியான், நெற்றியிலே பொட்டுமிடான், உருத்திராக்கமுமணியான், பூமியை நோக்காது அகன்ற ஆகாசத்தை நோக்க நடப்பான், தேரடிப்பகுதியில் சிங்காரமாய் கிடப்பவன்' என யோகர் சுவாமிகள் தமதுகுருநாதனின் குணநிசயங்களை வர்ணித்துள்ளார்.

இளமையில் கல்வி கற்கும்போதே அவருக்கு ஞானத்திலேயே நாட்டம் உண்டானது. உத்தியோகம் புருஷ லட்சணம் என்பதற்கேற்ப யாழ்ப்பாணக் கச்சேரியில் ஆராய்ச்சி உத்தியோகம் பெற்று வெள்ளைக்காரர்கள் பாராட்ட மதிப்புடன் உத்தியோகம் வகித்த செல்லப்பரின் போக்கு எல்லோருக்கும் ஒரு புதிராக இருந்தது. எவருக்கும் பிடிகொடாமல் தாமும் தம் கடமையுமாக வெளியே நடந்து தம் அகநாட்டத்தில் கருத்தூன்றி நல்லூர்க்கந்தனுடன் அர்த்தசாமத்தின் பின் யாருமறியாத வண்ணம் அந்தரங்கமாகத் தொடர்பு கொண்டுள்ளார். அவருடைய அகவாழ்வில் மாறுதல் ஏற்பட புறவாழ்விலும் மாறுதல் ஏற்பட்டது. உற்றார் உறவினரிடமிருந்து ஒதுங்கினர். பிச்சையேற்று உண்ண ஆரம்பித்தார். அவரது போக்கு பித்தர் போல

வும், பிசாசு பிடித்தவர் போல
குள்ளே கதைத்து 'ஓமோம்' என்
சைத்தும் வலக்கையை மேலே
விசுக்கி உரத்துப்பேசி ஒருவரையும்
அண்ட விடாது 'விசர்ச் செல்லப்ப
னும் பெயரும் பெற்று வாழ்ந்த
ரது விசர்ப்போக்கை கண்ட சி
இவரை விசரன் என்றெண்ணி
எறியவும் தலைப்பட்டனர் உற
இவரை விலங்கிலே மாட்டி வை
உண்டு.

## தீட்சை

இப்படியான காலத்திலே பெ
தியை நல்லூர்த் தேரடியிலே
கொண்டிருக்கும் போது நல்லூரை
மிட்ட கடையிற் சுவாமிகள் நல்லூர்
லப்பரின் பரிபக்குவ நிலையை கண்
ரைப் பலமுறை உற்று நோக்கியு
ஒருநாள் செல்லப்பர் கடையிற் சுவா
வணங்கி ஒரு எலுமிச்சம் பழ
கொடுத்தார் இன்னொரு நாள் ஒ
தல் சாராயமும் ஒரு முழு ரூபாவும்
துக்கொண்டு காத்திருந்தார். தூர
கடையிற் சுவாமிகள் வருவதைக்
செல்லப்பர் ஓடோடிப்போய் அப்
களை கொடுக்க எடுத்தாராம். போ
வெறும் போத்தலாயிருக்கக் கண்ட
செல்லப்ப சுவாமிகளின் பரிபக்குவ நி
உணர்ந்த கடையிற் சுவாமிகள் '
முச்சந்திக் குப்பையிலே முடங்கி கிட
செல்லப்பரின் தலைமேல் குடை
றைப் பிடித்து பக்கத்தில் நின்ற
காரியிடம் ஒரு முழு ரூபாவை வெ
யில் வைத்து செல்லப்பருக்கு கொ
ஓடும்படி விரட்டினாராம். இதுவே செ
பருக்கு ஞானோதயம் ஏற்படும் திட்ட
அமைந்தது.

பகல் முழுவதும் விசர்க்கோலம்
டிருக்கும் செல்லப்ப சுவாமிகள் இ

# ானபரம்பரை

ூர்க் கந்தனின் அர்த்த சாமப் பூசை றைவேறிய பின் எல்லோரும் சென்ற பிற் ு 'பரமபிதாவே! பரமபிதாவே' என ைன கூவியழைத்து உரையாடி வந்துள் ர். உள்ளத்தில் எழுந்த துறவு மனப்



பான்மையினுல் உலகத்தை அறவே துறந்த செல்லப்ப சுவாமிகள் வெளியுலகத்தவருக்கு விசரனுகவும், ஆன்ம ஈடேற்றம் கருதிய பெரியவர்களுக்கு ஞானியாகவும் காட்சிய ளித்தார். அவர் பொது மக்களிடம் வாங்கிய பட்டத்திற்கமைய மேலும் பைத்தியக் கோலத்தை மிகைப்படுத்தி வந்தார். யோகர் சுவாமிகள்கூறிய அறிவுரையின்படி செல்லப்பர் வேண்டுமென்றே விசரனுக நடித்துள்ளார். ஒருமுறை யோகர் சுவாமி கள் ''செல்லப்பன் இங்கு என்ன சாமி. தம்பிரான் என்றெல்லாம் பெயர் விட்டுச் சாகான். ஒரு விசரன், வீட்டுக்கு வீடு வாங் கித் தின்றுன், செத்துப் போனுன் என்று சொல்ல விட்டு சாவான் என்று, மேலும் ''சாமி காட்டாதே சாமி பண்ணினுல்யாழ்ப் பாணத்தான் தலைமேல் ஏறி கூத்தாடு வான்'' என எச்சரிக்கையும் செய்துள்ளார்.

இவரது அன்றாட வாழ்க்கை மிகவும் விசித்திரமானது. இவரது சகோதரர் பாசத் தால் ஈர்க்கப்பெற்று உணவை தம் சகோ தரர் செல்லப்பருக்கு வழங்கினுல் ''உன் னுடைய சாப்பாட்டை கொண்டு போ, நீ நஞ்சு போட்டுச் சமைத்து விட்டாய்'' என அதட்டி துரத்தி விடுவார். தாம் விரும்பி ஞல் சிலவேளை அச்சாப்பாட்டில் மிகவும் சிறிதளவை தாம் சாப்பிட்டு விட்டு எஞ் சிய பெரும்பகுதியை காகம், கோழி நாய் உண்ணுமாறு வைத்து வேடிக்கை பார்ப் பார்.

**ம. சிவயோக சுந்தரம்**

உயிரினங்களை அன்பாக ஆதரித்து உறவு கொண்டு வந்துள்ளார். ஒரு நாள் செல்லப்பர் உண்பதற்கு உணவை எடுத்துக் கொண்டு நடந்த போது நாய்க்குட்டியொ ன்று அவரின் காலடியை நக்கியவாறு பின் தொடர்ந்தது. அதனின் கர்மபலனை உடன டியாக உணர்ந்த சுவாமிகள் தாம் கொண்டு சென்ற உணவில் ஒரு பகுதியை நாய்க்குட் க்கு வைத்து விட்டு ''நீ உண்ட பின் வழி போ'' என விடை கொடுத்தார். நாய்க் குட்டி உண்ட பின் நடந்து போன வழியில் கார் நெரித்த உடனே இறந்து போயிற்று.

## பிச்சை ஏற்றல்


யோகர் சுவாமிகளையும் கூட்டிக் கொண்டு ஒரு நாள் பெரியகடையில் பிச்சை யேற்கச் சென்ருர். ஒரு செட்டியார் கடை யில் பல மணி நேரம் உச்சிவெயிலில் இருவ

ரும் வெயிலின் அகோரத்தால் வேர்க்க, வேர்க்க வெறும் காலாக நின்ருர்களாம், உள்ளே கணக்கப்பிள்ளை தன்னுடைய அவசர வேலையாய் வெளியில் நின்றவர்களை கவனிக்கவில்லை. வெகுநேரத்தின் பின் கணக்கப்பிள்ளை ஒரு சதம் கொடுத்தார், காசை வாங்கிய செல்லப்பர் மிகவும் பயபக்தியாக ஒரு சதத்தை கண்களில் ஒத்திக் கொண்டு நடந்தார். இதைப் பார்த் யோகர் ''உப்படிக் கஷ்டப்பட்டுசம்பாதிக்க வேணுமோ'' எனக் கேட்டார். !: உனக்குத் தெரியுமே! இதுவல்லவோ அருமையான சம்பாத்தியம். ''பிதா தந்தரே போக மென்பது தானுழந்துண்ணல்'' என்றல்லவா என்று மறுமொழி கூறினுராம் செல்லப்ப சுவாமிகள்.

கொழும்புத்துறையில் வாழ்ந்த இராமலிங்கரின் குழந்தையொன்றுக்கு ஒரு நாள் கடும் சுகவீனம் ஏற்பட்டது. இக் குழந்தையை செல்லப்பர் சுவாமிகளிடம் அழைத்து ஆசி பெற ஆயத்தம் செய்தனர். அப்போது குழந்தையின் பாட்டி (குழந்தையின் தாயின் தாய்) இந்த விசரன் என்ன சாதியோ கோத்திரமோ தெரியாது, எங்கள் பிள்ளையை அங்கே கொண்டு செல்ல வேண்டாமென எச்சரிக்கை விடுத்தார். ஆயினும், இராமலிங்கர் கிழவியின் சொல்லை அலட்சியம் செய்துவிட்டு நேரே குழந்தையின் தாயுடன் செல்லப்பரிடம் சென்ருர்கள். இவர்கள் வரவைக் கண்ட சுவாமிகள் ''கனகம்மா, பிள்ளையை இங்கே கொண்டுவா, தமிழ்ப் பரிகாரியிடம் காட்டி இன்ன மருந்து வாங்கிக்கொடு. உன்னுடை கொம்மா சாதி பேசுகிருர்; நாங்கள் வந்தார்: வரத்தார் இல்லை'', எனக் கூறி குழந்தையைத் தொட்டதும் குழந்தையின் காச்சல் குறைந்து சிறிது நாட்களில் வருத்தம் முற்ருக மாறிவிட்டது;

## விசரன் என்று பெயர்

சில வேளைகளில் யோகர் சுவாமிகளை ''யோகா வா கீரிமலையில் நீராடி வருவோம் என கூட்டிச் சென்று கீரிமலையை அடைந்ததும் கடற்கரையில் நின்று நீராடி விட்டோம் வா என நீராடாமலே சென்ற வேகத்திலேயே திரும்புவார்கள்; சில வேளைகளில் இருவருமாக சமைத்து சமையல் முடியும் தறுவாயிலிருக்கும் போது பானையைத் தூக்கி அடித்து ''வயிறே உனக்கு ஒன்றும் தரமாட்டேன் எனக் கூறுவாராம்;



ஒரு சமயம் நல்லூரிலிருந்து மட்டுவிலுக்கு நடந்து சென்று ஒரேயொரு கத்தரி வாங்கி நுனிக்காம்பில் இரண்டு விரல்களாலும் பிடித்தவாறு விரைந்து மீண்டு, வந்த வழியில் முத்திரைச் சந்தையில் காற்படி அரிசி வாங்கி தம் கந்தையான சால்வைத் துணியில் முடிந்த பின் ஒரு சதம் குறைந்துக் கொடுத்து வியாபாரம் செய்த பெண்ணிடம்

ஏச்சு வாங்கி மகிழ்ந்தவாறு கொட்டிலுக்கு மீண்டும் பக்குவமாக சமைத்தார். சமையல் முடிந்தது.

அங்குமிங்குந் தேடி ஒரு பெரிய தடியை எடுத்து சட்டி பானைகளை அடித்து நொருக்கி எல்லாவற்றையும்காகம்,கோழி,நாய் தின்ன வீசிவிட்டு மூலையிலே குந்தியிருந்து பார்த்து சிரித்து மகிழ்வார். இப்படி வேகங் கொடுத் தாண்ட மன்னனை விசரன் என எம்ம(ா)க் கள் பெயர் சூட்டினர்.

நல்லூரானின் திருவிழாவில் ஒரு நாள் சுவாமி வெளிவீதி உலாவிற்கு வருகிறார். குருவும் சீடனுமாக செல்லப்பரும்,யோகரும் வெளிவீதியிலே சாமிதரிசனம்செய்துகொண் டிருக்கையில் யோகர் செல்லப்ப சுவாமிகள் தமது பக்கத்தில் நிற்பதையும் மறந்து இன் றைக்கு ''நல்லூரான் நன்றாக நனையப் போகிறான்'' என்றாராம். உடனே செல்லப் பர் இதைக் கேட்டவுடன் ''உப்பிடிப் பல பேர் நல்லூரிலே பண்ணினவர்கள்'' எனச் சிரித்தார், ஆனால் அன்று சுவாமிவடகிழக்கு மூலையில் எழுந்தருளிய போது நன்றாக மழை பெய்து நல்லூரான் நனைந்து விட்டார் இந்த அடிப்படையில் தான் செல்லப்பர் யோகர் சுவாமிகளிடம் ''செல்லப்பன் சாமி காட்ட மாட்டான் சாமி காட்டினால் யாழ்ப்பாணத் தான் விடமாட்டான்.'' செல்லப்பன் விச ரன் என்ற பெயரோடு சாவான்' எனக் கூறி னார் எனக் கருத இடமுண்டு.

நன்னியர் என்பவர் செல்லப்ப சுவா மிகள்மீது கொண்ட பக்தியால் அவரை இறு கப் பிடித்து மரத்தில் கட்டிவைத்து நல்ல முறையில் நீராட்டினார்.செல்லப்பசுவாமிகள் ''எடஎட நீ நல்லூரானுக்கு அபிஷேகம் செய்தது போதும்,போதும் அவிழ்த்து விடு'' என மன்றாடி விடுவித்துக் கொண்டு ஓடினார்.

## குழந்தைப் பாக்கியம்

செதிலையாபிள்ளை என்பவர் ஐந்து பெண் பிள்ளைகளுக்கு தந்தை. தனது இறுதிக் கால கடமைகளை செய்ய ஆண்பிள்ளை ஒரு வர் இல்லையென மனக் கவலையால் வருந்தி ஒரு நாள் செல்லப்பசுவாமிகளிடம் வந்து' இறுகக்கட்டிப் பிடித்து 'சுவாமி எனக்கு ஆண் பிள்ளை இல்லை,ஆண் பிள்ளை ஒன்று வேண்டும், அருள் செய்த பின்னரே இந்தப் பிடியை விடுவேன்'' என்று கூறினார் செல் லையா உனக்கு ஆண் குழந்தை கட்டாயம் பிறக்கும்விடுவிடு''என்று விடுவித்துக்கொண் டார். செல்லையருக்கு அடுத்தஆண்டுஆண் குழந்தை பிறந்தது.

யோகர்சுவாமிகள் போல்தமது குருவின் சிறப்புக்களைப் பாடியவர்கள் மிகவும் குறைவு. யோகசுவாமிகள் குருவின் உபதேச த்தை அவதானமாகக் கேட்டு வந்துள்ளார். செல்லப்பசுவாமிகள் சாதாரணமாக விச ரன் போலப்பேசுவார். அப்பேச்சுகளிடையே மாணிக்கம் வருமென்றும், அவற்றைக் காத் துக் கொண்டு மணிக்கணக்காகத் தாமிருப்ப தாகவும் யோகர்சுவாமிகள் கூறியுள்ளார் கள்

செல்லப்ப சுவாமிகள் சுகவீனமாகப் படுத்திருக்கிறார் யோகர் சுவாமிகளும் மற் றவர்களைப் போல் செல்லப்ப சுவாமிகளை வருத்தம் பார்க்க சென்ற போது அவர் உள்ளே செல்லுமுன் 'என்ன பார்க்கப் போகி றாய், நில் அங்கே, உன்னைச் சிந்தித்துப்பார்' என்று கூற யோக சுவாமிகளும் குருநாதன் சொற்கேட்டு உள்ளே செல்லாமல் வெளியே நின்று அகக்கண்ணால் அவரைக்கண்டு வண ங்கி மீண்டார்.

''நல்லூரை ஞான பூமியாக்கி
செல்லப்பன் திருத்தாள் போற்றி''

# படித்துறையைக் காத்து நிற்கும் படைப்புக் கடவுள் பிரமா

படைத்தல், காத்தல், அளித்தல் என்பன உலகம் நிலைபெறுவதற்காக நிகழும் முத்தொழில்கள். இம்முத்தொழிலையும் செய்யும் கடவுளரை முறையே பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்பர். இம்மூவரையும் ஒன்றிணைத்து மும்மூர்த்திகள் என்பது மரபு.

பிரமா, விஷ்ணு ஆகிய இரு மூர்த்திகளுக்கும் ஓர் ஐயம். 'எம்முட் பெரியவர் யார்? என்பது தான் அந்த ஐயம். அந்த ஐயத்தை, தீர்க்கச் சிவன் அவர்கள் முன்னே சோதி வடிவாகத் தோன்றினுன். சோதியின் அடியை அல்லது முடியைத் தேடிக் காண்பவனே பெரியவன் என்று மறை குரல் ஒலி (அசரீரி) கேட்டது. படைப்போன் தன்னை அன்னப் பறவை வடிவாகப் படைத்துக் கொண்டு சோதியின் முடியைத் தேடப் பறந்து சென்ருன். காப்போனுகிய விஷ்ணு தன் பெருமையைக் காத்துக் கொள்ள பன்றி வடிவெடுத்து, நிலத்தைக் குடைந்து அடியைக்காண விரைந்து சென்ருன்.

பிரமன் செல்லும் வழியில் சிவனின் திரு முடியிலிருந்து வீழ்ந்த தாழம் பூ பிரமனைச் சந்தித்தது, பிரமன் முடியைக் கண்டதாகப் பொய்ச் சாட்சி கூற ஒப்புக்கொண்டது. தாழம் பூவுடன் பிரமன் கீழடைந்தார் அடியைத் தேடிச் சலித்த விஷ்ணு திரும்பி வந்து சோதி வடிவின் முன்னே பணிந்து வணங்கி நின்ருர். தாழம் பூவுடன் வந்த பிரமா முடியைக் கண்டுவிட்டதாக ஆர்ப்பரித்தார் தாழம் பூ பிரமா கண்டதாகச் சாட்சி கூறியது. சிவன் சிவந்தான். பொய்கூறிய பிரமா செருக்கடங்கிப் பணிந்து நின்ருன். அப்போது சிவன் இலிங்க வடிவிலே தோன்றினுன்; சிவனின் இந்த மூர்த்தம் இலிங்கோற்பவர் எனப்படுகிறது.

அப்பர் பெருமான் இலிங்கோற்பவர் பற்றிப் பின் வருமாறு பாடுகின்ருர்

செங்கணனும் பிரமனும் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென் றிலிங்கத்தே தோன்றினுன்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.

சிவபெருமான் பிரம விஷ்ணுக்களுக்கு அருள் புரிவதற்காகச் சோதி வடிவில் தோன்றிய நாள் மகாசிவராத்திரி எனப்படுகிறது. மாசித்திங்கள் தேய்பிறை பதினுன்காம் நாளில் சிவராத்திரி அமைகிறது. இந்த நாளில் இரவு பதினுன்கு நாழிகைக்கு மேல் வருடம்முகூர்த்தம் இலிங்கோற்பவ காலம் எனப்படுகிறது.

– கூத்தன் -

கதை இதனுேடு முடிந்துவிடவில்லை. சீற்றமுற்ற சிவன் பிரமாவை யாரும் வணங்கக் கூடாது என்றும் அவனுக்குக் கோயில் அமைக்கக்கூடாதென்றும் தடையுத்தரவு போட்டுவிட்டார்; சிவபூசைக்குத் தாழம் பூவை சேர்க்கக்கூடாது என்றும் விதி செய்து விட்டார்! சிவனது விதியால் பிரமனுக்கு எங்கும் கோயில் இல்லை.

எனினும், அருமையாகப் பிரமனுக்கு இரண்டொரு கோயில்கள் அமைந்துவிட்டன. மகேந்திரவர்மன் மும்மூர்த்திகளுக்கு அமைத்த கோயிலில் பிரமன் இடம் பெற்றுள்ளான். அப்பரால் மதம் மாற்றப்பட்டவனுகக் கொள்ளப்படும் மகேந்திரவர்மபல்லவன் மண்டகப் பட்டு என்ற இடத்தில் ஒரு குடைவரைக் கோயிலை உருவாக்கியுள்ளான். அது பிரமா, விஷ்ணு ஆகிய மூவருக்கும் ஏற்படுத்திய

கோயில் என அவனது கல்வெட்டுக் கூறுகிறது. மாமல்ல புரத்தில் பல குகைக் கோயில்கள் உள்ளன. பல்லவர் காலத்தைச் சேர்ந்த தர்மராஜரதம், ஆதிவராகக் குகை, கடற் கரைக் கோயில் ஆகியவற்றில் நான்முகன் திரு வுருவங்கள் உள்ளதாக டாக்டர் இரா. நாக சாமி கூறுகின்றார். (மாமல்லை, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை. 1930 ப. 141)

சிவனைத் தனிப்பெருங் கடவுளாக கொள்ளும் பௌராணிக மரபு பிரம வணக்கத்துக்கு மறுப்பாக அமைந்தது. எனினும், படைத்தற் கடவுள் என்ற வகையில் நான்முகனின் வழி பாடு தொடர்ந்ததாகத் தெரிகிறது. இதனால் கருங்கல்லிற் செய்யப்பட்ட பெருந்தொகை யான பிரம்ம விக்கிரகங்கள் உள்ளன. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் (சோழர் கலைப்பாணி பாரி நிலையம், சென்னை. 1966) கும்பகோணம் நாகேசுவரர் கோயில், திருக்கண்டியூர், தக் கோலம் திருவூறல் மகாதேவர் கோயில், எறும் பூர் கடம்பவனேசுவரர் கோயில், புள்ளமங்கை பிரமபுரீசுவரர் கோயில், புஞ்சை நல்துணைசு வரம் ஆகிய கோயில்களில் உள்ள பிரமன் திருவுருவங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

பிரம்மனின் கலை எழில் மிக்க கருங்கற்சிலை ஒன்று சிம்மக்கல் என்ற இடத்திலிருந்து வைகை ஆற்றங்கரைக்குச் செல்லும் வழியருகே கண்டறியப்பட்டுள்ளதாக இந்து இதழ் (THE HINDU) செய்தி வெளியிட்டுள்ளது.

சந்தன நிறக்கருங்கல்லில் அருமையாகச் செதுக்கப்பட்டுள்ள இப் பிரமன் சிலை கி. பி 10 ஆம் நூற்றாண்டுக்குரியது என்றும்' பாண்டிய அரசர் மரபுக்குரிய கலைப்பணி கொண்டும் மதுரைத் தொல்லியற் காப்பகக் காப்பாட்சி யாளர் குறிப்பிட்டுள்ளார். வழிபாட்டுக்குரிய படைப்புக் கடவுளாகிய பிரமன் இன்று படித் துறை வீதியின் காவலன் போலப் பீடும் பெரு மையும் இழந்து நிற்கிறான்,

வைகை ஆறு காலத்துக்குக் காலம் நிலத் திற் புதைந்த பழம்பெரும் கலைச்செல்வங்களைத் தன் அலைக்கரங்களால் அகழ்ந்து வெளிக் கொணர்ந்திருக்கிறது. எட்டாம் நூற்றாண்டுக் குரிய ஏழடி உயரமுள்ள விஷ்ணு சிலை ஒன்று சில காலத்திற்குமுன் இங்கு வெளிப்பட்டது. சில காலம் வைகை படித்துறை காத்த விஷ்ணு இன்று மதுரை தொல்பொருட் காப்பகத்தில் எட்டாம் நூற்றாண்டுக்குரிய பாண்டியர் சிற் பத்திறனுக்குச் சான்றாக விளங்குகிறது,

இவ்வாறே வைகைக் கரையிற் கண்டெடுக் கப்பட்ட எட்டாம் நூற்றாண்டுக்குரிய முருகன் சிலையும் மதுரைத் தொல்பொருட் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது. தாமரைப் பூவில் இருந்த கோலத்தில் பிரமனை வடிப்பதே சிற்ப வியல் மரபு எனக் கருதப்படுகின்றது. எனினும் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் எடுத்துக் காட்டும் ஆறு பிரமன் திருவுருவங்களுள் மூன்று நின்ற கோலத்திலும் மூன்று இருந்த கோலத் திலும் உள்ளன. திருக்கண்டியூர், எறும்பூர்த் திருவுருவங்களிலேயே பிரமன் பத்மாசனத்தில் வீற்றிருக்கிறான்.

வைகைப் படித்துறையருகேயுள்ள பிரமன் தெய்வங்களுக்குரிய அனைத்து ஆடை, அணிக லன்களோடும் பொலிவுடன் படைக்கப்பட் டுள்ளான். எனினும் உதரபந்தனம் மட்டும் அமையவில்லை. நான்முகனாகவும் ஈரிரு தடந் தோளனாகவும் படைக்கப்பட்ட பிரமனின் கீழ் வலதுகை சிதைந்துள்ளது. வலதுகை அபய முத்திரையோடு உடைந்த நிலையில் முழுமை யாக உள்ளது. ஓரளவு சிதைந்த நிலையிலும் கூட விக்கிரகம் முழுப்பொலிவோடு அமைந் துள்ளது.

மறைபொருட் புன்முறுவலுடன் விளங்கும் இப் பிரமன் திருவுரு தென்னாட்டுப் பிரம வடிவத் துக்குரிய சிறப்புக்களோடு பொலிகிறது. தாடி யற்ற முகம், ஒடுங்கிய இடைப்பகுதி என்பன இதன் சிறப்புக்கள். வடநாட்டுப் பிரமன் தாடி யிடன் 'தொப்பை அப்பன்' ஆகக் காட்சி தரு கிறான்.

சிற்பவியல் நலன்கள் பொலிந்த படைத் தற் கடவுள், படித்துறை வழியில் இயற்கை யின் அழித்தல் நியதிகளுக்குட்படாது உரிய முறையில் மதுரைத்தொல்பொருட் காப்பகத் திற் காக்கப்பட வேண்டும் என 'இந்து' செய் தியாளர்' கிருஷ்ணா கருத்துவெளியிட்டுள்ளார்.

# செம்பு விக்கிரகங்கள்



ஆலய நிர்மாணம் என்பதில் பிரதான மாகவுள்ளது இறைவன் திருவுருவம் ஆகும். இவற்றை மூர்த்தங்கள் என நாம் கூறுகிறோம். ஆலயத்தில் மூலஸ்தானத்தில் கருவறையில் கல்லினால் இறைவனது உருவம் வடித்தெடுக்கப் பட்டு பிரதிட்டை செய்யப்படுகிறது.

இறை உருவங்களில் இன்னொரு வகை செம்பு உலோகத்தினால் செய்யப்பட்டிருக்கக் காண்கிறோம். அந்த மூர்த்தங்கள் எப்பொழுதும் ஒரே இடத்தில் இருப்பதில்லை. நைமித்திக பூஜையின் போதும், உற்சவகாலங்களிலும் எழுந்தருளி வீதி உலாவாக வருவதற்குரியவை.

கல் விக்கிரங்களை நிலையாகஉள்ளதாகவும், செம்பு விக்கிரகங்களை இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லக் கூடியதாகவும் முன்னோர் வகுத்துக்கொண்டனர். இது அவர்கள் விஞ்ஞானத்தில் எல்லையில்லாத அறிவு பெற்றிருந்த தற்கொரு சான்றாகும்.

— எஸ். என். நடராஜன் —

இறை சக்தியை இன்று கண்ணால் காண முடியுமா? முடியும். என்றும் எப்பொழுதும் ஒரே விதமாகப் பாகுபாடின்றி ஒளியைக் கொடுத்து எங்கள் வாழ்க்கைக்கு அடிப்படையான சீராளன் (Regulating Controller) எனக் கூறப்படுபவன் ஒருவனை நாங்கள் தினமும் தரிசிக்கிறோம். அவனே ஆதவன். சூரிய பகவான் அவனில்லையேல் உலகமில்லை. அவனிடமிருந்து வெளிப்படும் சிறந்த சக்தி மின்காந்தம், மின்சாரம். அணுசக்தி எனவெல்லாம் பலவாறாக அன்றைய விஞ்ஞானிகள் பல நிலைகளில் கூறுகின்றனர்.

அந்த மின் சக்திஸ்வரூபத்தை ஆலயத்தில் மட்டுமின்றி வெளியிலும் மக்களுக்குக் கிடைக்கச் செய்யவே உற்சவங்களும் அவற்றில் வீதியுலாவும் உருவாக்கப்பட்டன.

செம்பு என்னும் உலோகம் மின்கடத்தி என்பது நாம் அறிந்ததே. இதைக் கருத்தில் கொண்டே எழுந்தருளி மூர்த்தங்கள் செம்பு உலோகத்தால் ஆக்கப்பட்டன,

மந்திரரூபமாக இறைசக்தியை தொலைக் கட்டுப்பாடு (Remote Control) மூலம் இந்த விக்கிரகங்களில் கடத்தி அதைமக்களுக்குப் பயனுள்ளதாக ஆக்கப்படுகிறது. விக்கிரகங்களை மரத்தினாலான இருக்கையிலேயே பொருத்தி வைக்கவேண்டும். இதன் பொருட்டே தேர், பல்லக்கு மற்றும் வாகனங்கள் உருவாகின.

வாகனங்களை இழுப்பவர்களையோ, தூக்குபவர்களையோ மின்சக்தி தாக்கிவிடக் கூடாது என்பது அவசியமல்லவா, மேலும் ஆலயங்களிலும் தேர் முதலியவைகளில் மேலே ஸ்தூபி வைப்பது என்பதும் இந்த மின்தாக்கத்தை

இறைவனிடத்தே ஒடுக்குவதற்காகும் இதை ஒரு வகையில் அபாயத்தடுப்புக் கருவிக்கு ஒப்பிடுதல் ஓரளவு பொருந்தும்.

இறை சக்தியை தாங்கும் மூர்த்தம் எங்ஙனம் இருக்க வேண்டும் என்பதை ஆகம, சில்ப சாத்திரங்கள் விபரிக்கின்றன இன்றைய எலக்டிரானிக் கருவிகளில் காணப்படும் Cercuit அமைப்பையெல்லாம் மிஞ்சியது சில்பசாஸ்திரம். இதிலுள்ள க்ஷேத்திரகணிதம் எளிதில் விளங்கிக்கொள்ளக் கூடியதல்ல. மனிதனுடைய உடலமைப்பைப் போன்று இறைஉருவம் வடிக்கப்பட்டிருக்கிறது.

எழுந்தருளிபாக உள்ள செப்புத்திருமேனிகள் வீதிவலம் வருவதில் மற்றொரு உண்மையும் தங்கிருக்கின்றது. இறைசக்தியை செப்புத்திருமேனியில் குறிப்பிட்ட அளவில் (Voltage) வரச்செய்து அந்த நிலையைப்பாதுகாப்பு ஒழுங்குகளுடன் ஆலயத்தை விட்டு வெளியே கொண்டு வருகிறார் என்பதை நாம் உணர வேண்டும்.

வெளியில் வந்த பிறகும் குறிப்பிட்ட சந்திகளில் கட்டாயமாக நிறுத்தி கற்பூரதீபம் காட்டுவது வழக்கம். மக்களுக்கு இறையருளாகிய சக்தி கிடைக்கச் செய்யும் அதிகாரம் ஆலயகுருவினிடமே தங்கியுள்ளதாகையால், அவர் முறையாக இறைவனுடன் கூடவே வந்து காலத்திற்குக் காலம் மந்திர புஷ்பாஞ்சலி இறைவனுக்கு அளித்து அவரது அருள் கிடைக்க வழிசெய்கிறார். இறைவனது அருளாகிய சக்தி அனைவருக்கும் கிட்டமுடிகிறது. செப்புத் திரு மேனியிலுள்ள தேக்கிவைக்கப்பட்டுள்ள மின்காந்த அணுசக்தி மக்களுக்குப் பிரதிபலிப்பாகக் கிடைக்கின்றது. இது முழுக்க முழுக்க Wireless tele Contorl என அழைக்கப்படல் பொருந்தும் ''காயகல்பம்'' என்பது ஆலய நிர்மாணம் பற்றி விரிவாகக் கூறும் நூலாகும். அசலம், சலம், சலாசலம் என மூன்று வகைகளாக இதில் குறிப்பிடப்பட்டுளளது, உலோகத்தினால் செய்யப்பட்டதே இடம் விட்டு இடம் செல்லத்தக்கது என இதன் மூலம் தெரிகிறது. கல். மரம் இவற்றாலானது அசலம், (அசையாதது) தாதுவினாலும் இரத்தினத்தாலும் ஆனவை சலாசலம் (இருவிதமாகவுள்ளவை) உலோகத்தாலானது அசையக் கூடியது என்பதே இதில் கூறப்படுகின்றது.

★

மருதடி விநாயகா
வருக தேரில்!

கட்டப்பொருட்களைக்
கட்டோடு வாங்க

றஞ்சன்ஸ்
ஹாட்வெயர்ஸ்

(மருதடி விநாயகர் ஆலய மருங்கு)

யாழ் வீதி, மானிப்பாய்.

மருதடி விநாயகா
தேரேறி வருக!

மளிகைப் பொருட்களின்
மாளிகை

வி. எஸ். கணபதிப்பிள்ளை
அன் பிறதர்ஸ்.

ஆலடிச்சந்தி, மானிப்பாய்.

★அழகு சாதனப் பொருட்கள்
★விளையாட்டுப் பொருட்கள்
★அன்பளிப்புப் பொருட்கள்
★கோல்ட் கவரிங் நகைகள்
★நூல் வகைகள்

# அம்பிகாபதி பான்ஸி ரேடர்ஸ்

9A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

ஐங்கரன் அவனியில் தங்கிடும்
ஐஸ்வரிய ஊற்றாக வந்திடும்

நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்ய
நாடுங்கள்

# வி. எஸ். எம். ஸ்ரோர்ஸ்

ஆலடிச் சந்தி, மானிப்பாய்.

உரிமையாளர்:-
**வே. சி. மருதலிங்கம்**



உங்களது நயம் நம்பிக்கை
நாணயமுள்ள
தங்க வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்!

ஓடர் நகைகள் குறித்தகாலத்தில் செய்து கொடுக்கப்படும்.

# நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

**74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

தொலைபேசி இல. 21846

# பிள்ளையார் சுழி

எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும், பிள்ளையார் சுழி போட்டுவிட்டோ, அல்லது 'சுக்லாம்பரதரம்' குட்டிக் கொண்டேதான் ஆரம்பிக்கிறோம்.

எந்த தெய்வத்தை வணங்கினாலும் முதலில் பிள்ளையாரை வணங்கிவிட்டுத்தான் அந்த தெய்வத்தை வணங்குவோம்.

பார்வதிக்கும் பரமசிவனுக்கும் விவாகம் நடக்கிறது.

அப்பொழுது ரிஷிகள் முதலில் விநாயகர் பூஜை செய்யுங்கள் என்று சொல்ல, பார்வதியும், பரமசிவனும் விநாயகர் பூஜை செய்சின்றனர்'' என்று கூறுகின்றார் துளசிதாசர்!



இது என்ன வேடிக்கை! பெற்றோர்களுக்கே இப்பொழுதுதான் விவாகம் நடக்கிறது. அதற்குள் அவர்கள் மகன் விநாயகர் எங்கிருந்து வந்தார்!'' என்று நீங்கள் கேட்கலாம்.

ஆனால் தத்துவம் என்னவென்றால், பார்வதி, பரமசிவன் விநாயகர் மூவருமே அனாதி.

ஏதோ ஒரு அவதாரத்தில் பார்வதி, பரமேசுவரன் வருகிறார்கள்.

விநாயகர் என்றாலே, தலைவர் இல்லாதவர், அதாவது எல்லாருக்கும் தலைவர் என்று பொருள்.

அவர் பிரணவத்தின் சொருபமானதால் அப்படி அழைக்கப்பட்டார்.

விநாயகரை வணங்கினால் அவர் விக்கினங்களைத் தடுப்பார். வணங்காவிட்டால் விக்கினங்களைக் கொடுப்பார்.

இதில் அவர் பாரபட்சம் காட்டுவது கிடையாது.

திரிபுரத்தை எரிக்கச் சென்ற சிவன் விநாயகரை மறந்தார். அதனால் சிவனுடைய தேரின் அச்சு முறிந்தது.

பிறகு அவர் விநாயகரை நினைத்த பிறகு தான் தேர் சரியாயிற்று.

அதே மாதிரி வள்ளியை மணம் புரியச் சென்ற முருகன் விநாயகரை மறந்தான். அதனால் அவனுடைய நோக்கம் நிறைவேற வில்லை முருகன் கணபதியை வேண்டிக் கொண்ட பிறகுதான் அவனுடைய காரியம் கைகூடிற்று

விநாயகருக்கு ஏன் முதல் பூஜை! யாருக்கு முதல் பூஜை செய்ய வேண்டும் என்கிற பிரச்சினையைத் தேவர்களால் தீர்க்க முடியவில்லை.

அவர்கள் சிவனை யோசனை கேட்டார்கள்.

'' எல்லாரும் உங்கள் வாகனங்களில் அமர்ந்து இந்தப் புவனத்தைச் சுற்றி வாருங்கள் யார் முதலில் வருகிறார்களோ அவர்களுக்கு முதல் பூஜை '' என்று சொன்னார் சிவன்.

எல்லாத் தேவர்களும் தங்கள் தங்கள் வாகனங்களில் கிளம்பினார்கள்.

ஆனால் மூஞ்சூறை வாகனமாகக் கொண்ட விநாயார் என்ன செய்வார்! ஆகவே சிவனை வலம் வந்தார். சிவனுக்குள் அகில பிரபஞ்சமும் அடக்கம் என்பது அவருக்குத் தெரியும். தன் புத்தியைக் கொண்டு அவர் ஜெயித்தார்.

விநாயகரை எதற்காக வணங்கினாலும் வணங்கா விட்டாலும், ஐந்தாவது வேதம் என்று கருதப்படும் மகாபாரதத்தை தன் தந்தத்தை உடைத்து எழுதிக் கொடுத்தாரே அதற்காக அவரை வணங்க வேண்டும்.

நான் சொல்லும் வேகத்துக்கு உம்மால் எழுதிட முடியுமா?' என்று கேட்ட வியாசரை.

'நான் எழுதும் வேகத்துக்கு உம்மால் சொல்ல முடியுமா? என்று கேட்ட விநாயகரை நாம் என்றும் வணங்குவோமாக!

— நாடோடி -

# முக்காலமும் உணர்ந்த முதல்வன்

புட்டபர்த்தியில் பிரசாந்திநிலைய மந்திரில் பரப்பப்பட்டுள்ள வெண் மணற் தரையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வரிசையாக அமர்ந்திருக்கிறார்கள்.



சித்ரா நதிக்கரையில் பாபா

பகவான் பாபாவின் தரிசனத்தைக் காணும் ஆவல் ஒவ்வொருவர் முகத்திலும் பரவிக் கிடக்கிறது.

பாபா மந்திரைக் கடந்து மக்கள் கூடியிருக்கும் மணற்தரைக்கு நடந்து வருகிறார்; அவர் அருகில் வந்தவுடன் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் குறைகளைக் கூற முற்படுகிறார்கள்;

சிலருக்கு அந்த இடத்திலேயே மறுமொழி கிடைக்கிறது; சிலருக்கு தனது விடுதிக்குப் போகும்படி கட்டளை இடுகிறார். பலரைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டார்;

இப்படிப் பட்டவர்கள் பலர் தங்களை பாபா விலக்கி வைப்பதாக நினைத்து மனம் உடைந்து அழுவார்கள்;

சிலர் தாங்கள் செய்த ''தப்புத் தண்டாக்கள்'' தெரிந்து தான் தங்களை பார்க்காமல் போகிறாரோ என மனங்கலங்குபவர்களாகவும் உள்ளனர்;

அவர் எது செய்தாலும் அது தங்கள் நன்மைக்காகவே என நினைத்து, அருச்சுனன் கண்ணனில் திடமான நம்பிக்கை வைத்திருந்தது போல அமைதியுடன் அவர் அருளுக்காகக் காத்திருப்பவர்களும் உண்டு.

அன்று ஒரு வெள்ளைக்காரப் பெண் கரங்களில் ஒரு மலர் மாலையுடன் காத்திருக்கிறார்; பாபா அருகில் வந்தவுடன் அவர் கழுத்தில் போடுவதற்காக;

ஆனால் பாபாவோ அந்தப் பெண் இருந்த பக்கமே போகாமல் போய்விட்டார். இதை வெள்ளைக்கார மாதுவால் தாங்க முடியவில்லை, முத்துமுத்தாக கண்ணீர் விட்டு அழுதார்.

அவர் விடும் கண்ணீரைக் கண்டு அருகில் இருந்த மற்றொரு இந்திய பெண் அவருக்கு ஆறுதல் கூறி

— சாயி பிரியா —

''பகவான் உங்களை அலட்சியப் படுத்தியதாக நினைக்க வேண்டாம். அதோ தெரிகிறதே கண்ணன் சிலை, அதற்கு இந்த மாலையை அணிந்து விட்டால் அது அவர் கழுத்துக்கு சூட்டுவதற்குச் சமன்''

என்றார்; அந்தப் பெண்ணும் அப்படியே செய்து சிறிது மனந்தேறினாள்.

ஆனால் அடுத்தடுத்த நாட்களில் எனக்கு அருகில் இருந்த சென்னையைச் சேர்ந்த ஒரு பெண் பாபா எமக்கு அருகில் வந்தவுடன், 'சுவாமி! நாங்கள் இன்று ஊருக்குப் போகிறோம்'

என்றார், எழுந்து நின்றபடி, (வழக்கமாக அங்கு செல்பவர்கள் தாங்கள் திரும்பிப் போகும் போது இப்படி சொல்வார்கள் அப்போதாவது பாபா தங்களைக் கூப்பிட்டு தங்கள் குறை நிறைகளைக் கேட்பார் என்ற ஒரு நம்பிக்கை அவர்களுக்கு)

அந்த பெண்ணின் நம்பிக்கையும் வீண் போகவில்லை; 'ஒரு தேங்காய் எடுத்துப் பிள்ளையாருக்கு அடித்து விட்டுப்போக வேண்டியது தானே...?' எனப் 'பளிச்' என்று அழகு தமிழில் கூறினார் பாபா. அந்த சென்னைவாசி அதிர்ந்து போய் பாபாவைப் பரவசத்துடன் தன்னை மறந்து பார்த்துக் கொண்டு நிற்க, பாபா எம்மைக் கடந்து போய்விடுகிறார்;

நான் அந்தப் பெண்ணிடம் பாபா! இப்படிக் கூறிவிட்டுப் போகிறாரே என்று அங்கலாய்த்தேன்;

உச்சியில் கை குவித்து, அவர் அதற்கான காரணத்தை விளக்கினார்;

'நான் பலமுறை புட்டபர்த்திக்கு வந்து விட்டேன். ஒவ்வொரு முறையும் அவரிடம் என் குறைகளைக் கூற பல வழிகளில் முற்படுவேன். ஆனால் அந்த அருள் கிடைக்காமல் மனம் வருந்தி அழுதுவிட்டு, 'இறுதியில் அருகில் உள்ள பிள்ளையாருக்கு ஒரு தேங்காய் அடித்து உடைத்து விட்டு, சென்னைக்குப் போய்விடுவேன்; இப்போது எனக்கு விளங்குகிறது. அவர் என்னைப் பார்க்காவிட்டாலும், என்னுடன் பேசாவிட்டாலும் என்னையும் என் செயல்களையும் அவர் கவனித்துக் கொண்டு இருக்கிறார் அவர் என்னைக் கைவிட மாட்டார்' என்றார் முகத்தில் நம்பிக்கை ஒளிவீச.

ஒவ்வொரு பக்தருக்கும் நிச்சயமாக இப்படி ஒரு அனுபவம் கிடைத்து இருக்கும்;

'ஒன்று உனக்குச் சொல்வேன்;

எப்படிஇருந்தாலும் நீ என்னுடையவனே.

உன்னை நான்கைவிட மாட்டேன்;

நீ எங்கிருந்தாலும் எனக்கு அண்மையில் தான் உள்ளாய்.

எங்கிருந்தாலும் நீ என் கைக்குள்ளேயே!!

தாய் தான் தூக்கிச் செல்லும் குழந்தையை கைவிடுவதும் இல்லை, கீழே விழுவதற்கு விடுவதும் இல்லை.

உன்னைச் சுமந்து செல்லவும், உன் கூட வரவும், உனக்கு உதவி செய்யவும் வந்திருக்கிறேன்.

உன்னை என்னால் கைவிட முடியாது; ★

— பாபா —

## கண்ணீர் மல்கிய காரியப்பா

ஜெனரல் காரியப்பா இந்தியாவின் முன்னாள் இராணுவப் படைத்தளபதி காஞ்சிப் பெரியவரைச் சந்திக்க, சுவாமிகள் முகாமிட்டிருந்த மடத்துக்கு சென்றார். இருவரும் கன்னட மொழியில் பகவத் கீதையைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்;

இறுதியில் காரியப்பா இரு கைகளையும் கூப்பிப் பெரியவரை வணங்கியபடி

சுவாமி நான் பல யுத்தகளங்களைப் பார்த்திருக்கிறேன் – யுத்த களங்களில் உலாவியிருக்கிறேன், பல இறந்த உடல்கள் மீது இரவு பகல் பாராது நடந்திருக்கின்றேன். அப்போதெல்லாம் நான் எதற்கும் பயந்ததே கிடையாது;

ஆனால், தங்களின் சன்னதியில் நிற்கும் பொழுது பயத்தினாலும், பக்தியினாலும், என்னால் சரியாகப் பேசவே முடியவில்லை.

என்று கண்ணில் நீர் பெருகக் கூப்பிய கை நடுங்கியவாறு கூறி நின்றார்.

தொகுப்பு :சிலம்பன்

# மனம் வெளுக்க வழியில்லையே!

சூப்பர் மார்க்கெட்டில் வாசுகியைக் கண்ட பவானி மகிழ்ச்சி பொங்க ''ஹாய்'' என்று சொன்னபடி கையைப் பிடித்தாள். வாசுகிக்கும் பவானியைக் கண்டதும் இனந்தெரியாத பூரிப்பு உண்டானது.

எவ்வளவு காலத்திற்குப்பிறகு எதிர்பாராத சந்திப்பு. கல்லூரிப்படிப்பை முடித்து இருவரும் கல்லூரியை விட்டுப் போனதும், இன்றுதான் முதல் சந்திப்பு.

இருவருக்கும் ஏற்பட்ட எதிர்பாராத மகிழ்ச்சியில் எதைப்பேசுவது. எதைப் பேசாமல் விடுவது. என்று தெரியாமல் மாறி மாறிப் பேசிக் கொண்டே இருந்தார்கள். மற்றக்கல்லூரித் தோழிகள் பற்றியும் படிப்பித்த ஆசிரியைகள் பற்றியும் பேசிக்கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை.

**வில்வம் பசுபதி**

அப்போதுதான் நேரத்தை அவதானித்த வாசுகி ''நான் போகணும் பஸ் போயிடும்'' என்று விடை பெற்றாள்.

''நோ நான் காரிலேயே விட்டுவிடுறன் வா'' என்றாள் பவானி.

இதுவரை வாசுகி அனுபவித்த இன்பம் மறைந்தோடியது, பவானியிடம் கார் இருக்குது அதை அவளே ஓட்டுறாள் என்று தெரிஞ்சதும் தன் நிலையை ஒப்பிட்டுப் பார்த்தாள். இவ்வளவு நேரமும் கலகலப்பாகப் பேசியதுபோல் அவளால் பேச முடியவில்லை.

இருவரும் காரில் போகும் போது ''முதல் என் வீட்டுக்குப் போய் ஏதாவது குடிக்கணும். இன்றைக்கு நல்ல நாள்'' என்றாள் பவானி.

வாசுகி ஒன்றும் பேசவில்லை. இவளுக்கு எப்படி இந்த நிலை ஏற்பட்டது? கார், பங்களா இந்த வசதிகள் எப்படி ஏற்பட்டன என்ற எண்ணங்களே அவள் மனதை ஆக்கிரமித்தன. பவானி பேசிக்கொண்டே காரைச் செலுத்தினாள். அவளுடைய பேச்சு ஒன்றும் வாசுகியின் காதில் ஏறவில்லை. தலையை ஆட்டியபடியே இருந்தாள் அவளுடைய அடிமனதில் தனக்கு இப்படி ஒரு ஆடம்பர வாழ்க்கை கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் உருவாகியது பவானி மேல் பொறாமைப் புயல் வீசியது.

பவானி வீட்டில் அவள் கண்ட வெளிநாட்டு ஆடம்பரப் பொருட்களும் கலர் டிவியும் பிறிஜ்ஜும் அவள் பொறாமையை மேலும் அதிகரித்தன

வீட்டிற்கு வந்ததும் அவள் மனம் அலைமோதிய வண்ணம் இருந்தது. பவானியின் ஆடம்பரமான வாழ்க்கையைச் சுற்றியே வட்டமிட்டது சமையலறை வேலையில் மனம் ஓடவில்லை. தனது வீட்டையும் அவள் வீட்டையும் எண்ணிமனம் புழுங்கினாள்.

மாலையில் கணவன் வரும் நேரம் வழக்கமாக தேநீர் தயாரித்து வைத்திருப்பாள். இன்று அதைக்கூட மறந்திருந்தாள்.

ஆபீசில் இருந்து வந்த அவள் கணவன் சிவலிங்கம் வழக்கம்போல் வரும் வழியில் உள்ள அம்மன் கோயிலில் கும்பிட்டுத் திருநீறு பூசிக் கொண்டு வந்தான். ஆபீஸ் போகும் போதும் வரும் போதும் கும்பிட்டு விட்டுத் தான் சென்று வருவது வழக்கம்.

கேற்றைத்திறந்து போகும் வீட்டுவெளி விறாந்தையில் வாசுகி நிற்பதைப் பார்த்தான் அவளுடைய முகத்தில் நிலவிய அசாதாரண

அமைதியைக் கண்டு கலவரம் அடைந்தான் ஏதோ விபரீதம் நிகழ்ந்திருக்க வேண்டும் என எண்ணினான். அறைக்குள் போய் உடைகளை மாற்றி வெளியே சிவலிங்கம் வந்த போது இன்டைக்கு பவானியைக் கண்டான், என்றாள் வாசுகி

அவனுக்கு யார் பவானி என்று புரியவில்லை ''பவானியா'' யாரது? என்று கேட்டான்.

''என்னோட படிச்சவ படிக்கேக்க தலை நிறைய எண்ணெ அப்பி நெத்தில குறியும் வைச்சு வருவா சரியான பட்டிக்காடு இப்ப அவவைப் பாக்கேலாது காரென்ன பங்களா என்ன பிரிட்ஜ் ரிவி என்ன ஆளே சரியா மாறீட்டா'' மூச்சு விடாமல் சொன்னாள்.

சிவலிங்கத்துக்கு இப்ப புரிந்து விட்டது. மனைவிக்கு ஏதோ தலைவலி என்று நினைத்தவன் தலைவலி இல்லை அது நெஞ்சுவலி. பவானி தன்னிலும் பார்க்க உயர்ந்த நிலையில் இருப்பதைப்பார்த்து இவள் நெஞ்சு கொதிக்குது.

''எல்லாம் அவரவருக்கு அமைஞ்சது தான் நடக்கும்'' என்றான்.

இப்படி வேதாந்தம் பேசத்தான் உங்களுக்குத் தெரியும். பவானியின் புருசனும் உங்களைப் போல் ஒரு ரெக்னிக்கல் ஆபீசர் தானே அவரால் இவ்வளவும் செய்ய முடியுமெண்டால், அது அவரது கெட்டித்தனம். உங்களைப் போல விபூதியும் சந்தனமும் அப்பிக் கொண்டு கடைசியில என்னத்தைக் கண்டது'

வாசுகி பொரிந்து தள்ளினாள். சிவலிங்கம் பொறுமையாகக் கேட்டான். அவள் வார்த்தைகளைக் கேட்கும் போது, மனைவி மேல் கோபத்திற்கு பதில் பரிதாபமே ஏற்பட்டது.

''இதையெல்லாம் ஏன் எனக்குச் சொல்கிறாய் எல்லோரும் பவானியின் கணவன் போல இருக்க முடியாது'', என்றான்.

''ஏன் இருக்க முடியாது வலுவில்லைவார சீதேவியை கை நழுவ விட்டிட்டு முடியாது என்று சொல்லுறியள். காரில கொண்டாக்டர் சங்கரலிங்கம் வீடு தேடி வந்தாரே, ஐந்து லட்சம் கொண்ராக்ட் வவுச்சரைப் பாஸ் பண்ணச் சொல்லி கெஞ்சினாரே. கையில ஐயாயிரம் வைச்சுக்கொண்டல்லா கெஞ்சினார். நீங்க அவரை கலைச்சு விட்டியள். எதுக்கும் துணிவும், மூளையும் வேணும்'' என்றாள்.

வாசுகியின் வார்த்தைகள் சிவலிங்கத்திற்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தன. லஞ்சம் வாங்கச் சொல்லியல்லவா வற்புறுத்துகிறாள், மனைவிக்கும் பொறுமையாக விளக்கினான்.

''வாசுகி காரில வந்தது பள்ளிக்கூடம் கட்டும் கொண்டாக்டர். கட்டிடவேலை முடியவில்லை முடிந்துவிட்டது என்று எப்படி பேமெண்ட் ரெக்கமெண்ட் பண்ணுறது அது பெரும் பிழையல்லவா. மனச்சாட்சி வேண்டாமா'' என்றான்.

''மனச்சாட்சியும் நீங்களும். பிழைக்கந் தெரியாத அசடுகள் சொல்லும் சொல்'' என்று சொல்லிவிட்டு கோபத்துடன் உள்ளே போனாள்.

''தாயே ஈஸ்வரி என்ன சோதனையம்மா'' என்று அவன் மனம் உருகியது அன்றைய பொழுது அமைதியற்றதாகக் கழிந்தது. மனைவியின் சொற்களாலும், செயல்களாலும் அவன் உள்ளம் மிகுந்த வேதனையடைந்தது. அவனால் நிம்மதியாக உறங்க முடியவில்லை.

அடுத்த நாள் அவன் ஆபீசால் வந்த போது வாசுகி ஒருவிதமான மகிழ்ச்சியுடன் காணப்பட்டாள். சிவலிங்கத்திற்கு வியப்பும் மகிழ்ச்சியுமாக இருந்தது. அவனைக்கண்டதுமே ''இன்டைக்கு சொனி பார்த்தன்'' என்று தொடங்கினாள்.

''நேற்று பவானி இன்றைக்கு சொனி யார் இந்த சொனி'' என்று எண்ணியவாறு'' அவளும் உன்னோடு படித்தவளா? என்று கேட்டான்.

'அசட்டுக்கேள்வி சொனி என்கிறது டிவி கலர் டிவி பதினாறுபிரம். ஐயாயிரம் அட்வான்ஸ் கட்டி பிறகு மாதம் ஆயிரம் கட்டலாம். நாளைக்கு வாறன் எண்டு சொன்னனான்' என்றாள்.

நஞ்சுடு " திக் " என்றது சிவலிங்கத்திற்கு. சர்வ சாதாரணமாக சொல்லும் இந்த அறிவற்ற பெண்ணை என்ன செய்வது, என்று கவலையுடன் சிந்தித்தான். அவன் யோசிப்பதைப் பார்த்த வாசுகி "எப்படியாவது கடன் எடுத்து ஐயாயிரம் கட்டுவம் பிறகு மாதா மாதம் ஆயிரம் தானே" என்றாள்

"ஐயாயிரத்திற்கு மாதம் இருநூறுரூபா வட்டி அதுதவிர மாதா மாதம் ஆயிரத்துக்கு எங்கை போவது இந்த ஐயாயிரத்தை எப்படி திருப்பிக் கட்டுவது நகை அடகு வைச்சுத்தான் அதுவும் எடுக்கணும்" என்று பொறுமையாக சொன்னான்

பொறுமை இழந்தாள் வாசுகி "உங்களாலை எதுவுமே முடியாது எதுக்கும் பயந்து சாகிறது" என்று சத்தம் போட்டாள்.

"நீ சொல்லுவது சரி நான் கடனுக்குப் பயப்படுகிறேன் நேர்மையற்ற செயல் செய்ய பயப்படுகிறேன் உண்மையில் இப்ப உனக்குப் பயப்படுகிறேன் தவறான வழிக்குப் போகத் தூண்டும் மனைவியைக் கண்டு பயப்படாமல் என்ன செய்வது என்றான்"

இவன் சொன்னதைக் கேட்க வாசுகி இல்லை அவள் அறைக்குள்போய் படுத்துக் கொண்டாள்.

சிவலிங்கம் அவள் போவதையே பார்த்துக் கொண்டு செய்வதறியாது இருந்தான்.

அன்று தொடக்கம் இருவருக்கும் உள்ள அந்நியோன்யம் அற்றுப்போனது. வாசுகி கணவனிடன் பேசுவதை நிறுத்திக் கொண்டாள். ஒரு கூரைக்குள் குடியிருந்தும் வேற்று மனிதரைப் போல் இருந்தனர்.

வாசுகியின் போக்கு சிவலிங்கத்திற்குப் பெரும் மனவேதனையைக் கொடுத்தது மனம் நிம்மதியின்றித் தவித்தது. அவனுடைய துன்பம் அவனுடைய முகத்தில் பிரதிபலித்தது.

தினசரி மாலையில் கோயிலுக்குப் போனான் பெரும் பொழுதை கோயிலிலேயே கழித்தான்.

இதை அவதானித்த அவன் நண்பன் சுதாகர் ஏண்டா கோயிலை குத்தகைக்கு எடுத்திட்டியா, எப்ப பார்த்தாலும் இங்கை நிக்கிறாய்" என்று கேட்டான்.

"மனம் அமைதியின்றி தவித்தால் எங்கே போவது? கோயிலைத்தவிர வேறு இடம் ஏது?" என்றான் சிவலிங்கம்.

சுதாகருக்கு ஒன்றும் புரியவில்லை ஏதோ பிரச்சனை என்று எண்ணி மெளனமாக அவனையே பார்த்தான்.

"என் மனைவியை சில அரக்கர்கள் படாது பாடு படுத்துகிறார்கள். பாதித்திருப்பது நான்"

'என்னப்பா எனக்கு ஒன்றுமே புரியேல்லை'

"பாரதியாரின் பாடல் உனக்குத் தெரியாதா?

"கலகத்தரக்கர் பலர் எங்கள் முத்துமாரியம்மா
கருத்தில் புகுந்துவிட்டார் எங்கள் முத்து மாரியம்மா"

நமது உள்ளத்திலே கலகம் செய்கின்ற பல அரக்கர்கள் இருக்கிறார்கள். வஞ்சகம், சூது, அவா, பொறாமை, வெகுளி தான் இந்த அரக்கர்கள். இவை மனதில் புகுந்தால் கலகம்தான், என் மனைவியின் மனதில் பொறாமை அவா குடி கொண்டுவிட்டன. அவள் மனம் வெளுக்கவும் வழி இல்லையே" என்று ஏக்கத்துடன் சொன்னான்.

சுதாகருக்கு "உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரியம்மா" என்ற பாடல் இப்போது நினைவுக்கு வந்தது. துணி வெளுக்க மண்ணுண்டு தோல் வெளுக்க சாம்பலுண்டு, மணி வெளுக்க சாணையுண்டு, மனம் வெளுக்க வழியில்லையே என்று ஏங்கும் பாரதியாரின் நினைவு வந்தது. அவன் சிவலிங்கத்தின் நிலையை எண்ணிப் பரிதாபப்பட்டான்,

சிவலிங்கத்திற்கும் வாசுகிக்கும் மனக்கசப்பு ஏற்பட்டு மூன்று கிழமைகளுக்கு மேல் ஆகிவிட்டன. அன்று மாலை சுப்பர் மார்கெட்டுக்குப் போன வாசுகி பவானியைக் கண்டாள்,

வாசுகியை கவனியாத பவானி ஏதோ பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தாள்,

பவானியைக் கண்டதும், வீட்டிற்கு இவளுடைய காரிலே போகலாம் என்று எண்ணினாள். அவளிடம் போய் அவள் கையை தொட்டதும், பவானி திரும்பினாள். வாசுகி அதிர்ந்து போனாள். அன்று கண்ட அதே பவானியா இவள்? முகம் வாடி, உடல் மெலிந்து, வருத்தக்காரி போல் காட்சி அளித்தாள்,

''என்ன பவானி காய்ச்சலாக இருந்தாயா மெலிந்து விட்டாயே'' என்று கேட்டாள்.

''இல்லையே, உனக்கு அப்பிடித் தெரியுது'' என்றாள்.

பேச்சில் முந்திய உற்சாகம் இல்லை. கலகலப்பான பேச்சும் இல்லை.

''போகும் போது உன் காரிலேயேவாறன்'' என்றாள் வாசுகி.

''காரிலை வரேல்ல. நானும் பஸ்தான்'' என்றாள்.

'பஸ்சா? ஏன் கார் ரிப்பேரா'

பவானிக்கு இப்போது கண்கலங்கி விட்டது அழுகையே வந்து விடும் போல் இருந்தது.

'வாசுகி என் வாழ்க்கை சரிந்து விட்டது. என் கணவரை லஞ்சம் வாங்கியதாக கைது செய்து ரிமாண்டில் வைத்து விட்டார்கள். அவரை வெளியில் எடுக்க காரை வித்தேன் நகைகளை வித்தேன், வீட்டு சாமான்களையும் வித்தேன் நண்பர்கள் எல்லோரும் எட்டப் போய் விட்டார்கள், உறவினர்கள் விலகி விட்டார்கள் வீடுமாறி இப்போது ஒரு சிறிய வீட்டில் இருக்கின்றேன். இந்த அதிர்ச்சியால் கணவருக்கு மாரடைப்பும் வந்து விட்டது. எனக்கு கார் வேண்டாம், பங்களா வேண்டாம், எனது கணவர் சுகமாய் இருந்தால் போதும், சிறுகுடிசையில்கூட ஆனந்தமாய் இருப்பேன். நல்லூர் முருகனிடம் அதைத்தான் தினமும்கேக்கிறேன் முருகன் எனக்கு அருள் புரிவார். என்று சொல்லும் போதே அவளுக்குத் துக்கத்தை கட்டுப்படுத்த முடியாமல் சேலைத் தலைப்பால் முகத்தை மூடி விக்கி அழுதாள்.

அன்று பவானியைக் கண்டு பொறாமைப் பட்ட வாசுகி இன்று பவானியின் நிலை கண்டு உண்மையில் மனம் வருந்தினாள். அவள் கண்களும் கலங்கின, ஒன்றுக்கும் கவலைப்படாதே. காலம் மாறும். இருவருமே பஸ்சில் போகலாம்'' என்று ஆதரவாக அவள் கையைப் பிடித்துக் கொண்டு பஸ் நிலையத்தை நோக்கிப் போனாள்.

வாசுகி பஸ்சில் போகும் போது கணவன் சிவலிங்கத்தின் நினைவிலேயே மூழ்கி இருந்தாள். தான் லஞ்சம் வாங்கச் சொல்லித் தூண்டியதையும், அதற்கு அவன் மறுத்ததையும் எண்ணிப் பார்த்தாள். அவனுடன் பேசுவதை நிறுத்தி, அவன் மனதை புண்படுத்தியதை எண்ணிப் பார்த்தாள், உடனேயே அவனைப் பார்க்க வேண்டும் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும் என அடக்க முடியாத அவா ஏற்பட்டது.

பஸ்சை விட்டுஇறங்கியவள் நேரே அம்மன் கோயிலுக்குப் போனாள். அங்கு சிவலிங்கம் வெளிமண்டபத்துப் படியில் இருந்து எதையோ வாசித்துக் கொண்டிருந்தான்.

தெய்வத்தை நேரில் கண்டதுபோல் இருந்தது வாசுகிக்கு. ஓடிப் போய் அவன் கால்களைத் தொட்டாள். யாரோ காலைத் தொடுவதை உணர்ந்து நிமிர்ந்த சிவலிங்கம் கண்கள் கலங்கத் தன் முன் நிற்கும் வாசுகியைக் கண்டு திகைத்தான்.

வாசுகி ஒன்றும் பேசாது அவன் முகத்தையே பார்த்தாள். அவளால் பேச முடியவில்லை. கண்கள் மன்றாடின, மன்னிப்பு கேட்டன.

சிவலிங்கம் எழுந்தான் ஒன்றுமே பேசாது அவள் கண்களைத் துடைத்து விட்டு அவள் கைகளை அன்புடன் பிடித்து வீட்டிற்கு அழைத்து போனான்,

மனைவியின் மனம் வெளுக்க அம்பாள் அருள் பாலித்து விட்டாள் என எண்ணிய சிவலிங்கம், நின்று அம்மனை வணங்கிவிட்டு, மனைவியுடன் வீடு சென்றான்.

*

# ஆலய நிழல் காணியில் விழுவதன் விளைவு–

## ஒரு நோக்கு

— கோப்பாய் சிவம் —

இந்து சமயத்தவர்களின் வழிபாட்டுக்கு அமைக்கப்படும் ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்படும் உருவத்திருமேனிகள் பல ஒரே பரம்பொருள் ஆன்மகோடிகளின் நன்மை கருதி பல பெயர்களில் பல வடிவங்கள் தாங்கி வருவது அப்பரம் பொருளின் கருணைத்திறமே.

நல்லோருக்குப் பேரருள் புரிவதற்காகச் சாந்த மூர்த்தமாகக் காட்சி தரும் அதே பரம் பொருள் தீய சக்திகளை அழித்தொழிப்பதற்காக உக்கிர மூர்த்திகளாக வடிவமெடுத்து வருவது வழக்கம்.

சில இடங்களில் சில ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்திகளின் உக்கிரத் தன்மையைத் தாங்க முடியாத காரணத்தால் அங்கிருந்த மக்கள் பலவிதமான கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்ததுண்டு. அவ்வேளைகளில் அவ்வுக்கிரத் தன்மையைக் குறைக்கப் பெரியோர்கள் பல வழிகளைக் கையாண்டனர்.

அவ்விதமான சில சக்தி தலங்களில் அன்னையின் மஹாயக்திரமான ஸ்ரீசக்கரத்தை அல்லது அம்பிகையின் அன்புக்குரிய புதல்வரான விநாயகப் பெருமானை அவனது பார்வையிற் படுமாறு நேரெதிரில் ஸ்தாபித்து உக்கிரம் நீங்கிக் கருணை பொங்கச் செய்த பெருமை ஆதிசங்கரருக்குரியது.

பொதுவாகவே ஆலயங்களின் ஸ்தூபி நிழல், ராஜ கோபுரத்தின் நிழல் முதலியன விழுகின்ற காணியில் வசிப்பவர்கள் அல்லது ஆலயத்தின் வாசல் நேருக்கு அல்லது ஈசான திசையில் இருப்பவர்கள் ஆகியோரும் இவ்வித சிரமங்கள் பலவற்றை அனுபவிக்க நேர்வதாகச் சொல்லுகிறார்கள்.

இத்தகைய ஒரு சோதனை இன்று நம் முன்னே தோன்றியுள்ளது. தமிழ் நாட்டின் மிகச் சிறந்த வைஷ்ணவத்தலமான ஸ்ரீரங்கம் கோயிலில் கடந்த ஆண்டுத் தொடக்கத்தில் மிகப்பிரமாண்டமான ராஜகோபுரம் கட்டி முடித்துக் கும்பாபிஷேகமும் இனிது நிறைவேறியது இந்தியாவிலேயே மிகவுயர்ந்த கோபுரம் இதுதான்.

இந்தராஜ கோபுரம் கட்டப்பட்டுவரும் நாளிலே பலர், இக்கோபுரம் கட்டி முடித்ததும் இலங்கைக்குப் பல இன்னல்கள் நேரும் என அச்சுறுத்தி வந்ததுண்டு. இதில் ஏதாவது சாஸ்திரரீதியான உண்மைகள் உண்டா என்பது தெரியாது. ஆனால், இந்த ஸ்ரீரங்கம் கோயில் தெற்கு முகமா இலங்கை நோக்கியவாறு அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீரங்கநாதர் ஆலயத்துக்கு நேரதிராக, இலங்கையின் வடமுனையில் ஒரு மஹாலக்ஷ்மி கோயிலை அல்லது ஆண்டாள் ஆலயத்தை அல்லது பக்த அனுமான் ஆலயத்தை அமைத்தால் இந்த விளைவுகள் தவிர்க்கப்படலாமா? ஆன்மீகவாதிகளின் சிந்தனைக்கு, இது சமர்ப்பணம்.

★

## இளங்கலைஞர்களிடையே

# கேள்வி ஞானம் பெருக வேண்டும்

*1. இசை இன்பம் உங்களுக்கு இன்பம் அளிக்கிறதா?*

இசை எனக்கு மட்டுமல்ல, சகல மக்களுக்கும் எல்லையில்லா இன்பம் தரவல்லது. அன்பும் பண்பும் விளைவிப்பது. மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி தீராத நோய் தீர்க்க வல்லது. முத்தியின்பம் தரவல்லது. இத்தகு பெருமையுடைய இசையை எம்மில் பலர் அறிந்து கொள்ள முற்படாதது வேதனைக்குரியது. இசை இன்பம் சொல்லித் தெரிவதில்லை. அனுபவித்துணரக்கூடியது. அன்பு, அடக்கம், பக்தி, மகிழ்வு, மனநிறைவு தரவல்லது இசை.

*2. இசையில், விசேடமாக வயலின் வாசிப்பதில் உங்களுக்கு எப்படி ஆர்வம் உண்டாகியது?*

எனது ஆர்வத்தைக் கண்டு சிதம்பரம் ராமகிருஷ்ண ஐயரிடம் என்னைக் கூட்டிச்சென்று வயலின் கற்றுக்கொள்ள வைத்தார். பின்னர் தஞ்சாவூர் என். ஜி. கோபாலகிருஷ்ண ஐயரிடம் குருகுலக் கல்வி மூலம் வயலின் கற்றுக் கொண்டேன்.

*3. இலங்கையில் எவ்வளவு காலமாக வயலின், சங்கீத பயிற்சி வகுப்புகளை நடாத்தி வருகிறீர்கள்?*

கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக இங்கு வகுப்புக்களை நடாத்தி வருகிறேன். ரசிகரஞ்சன சபாவில் கூட ஐந்து ஆண்டுகள் வயலின் வகுப்புகளை நடாத்தியுள்ளேன். தற்போது யாழ்ப்பாணத்தில் 'பாரதி கான சபா' என்ற நிலையத்தினை அமைத்து சங்கீதம், வயலின் போன்ற இசைப் பயிற்சி வகுப்புகளை நடாத்தி வருகிறேன்.

---

பேட்டி அளித்தவர்:-
**வயலின் வித்துவான் பிரம்மஸ்ரீ சி. சர்வேஸ்வரசர்மா**
பேட்டி கண்டவர்:-
**வி. பி. சர்மா**

---

வயலின் ஒரு இராஜ வாத்தியம். எல்லா வாத்தியங்களின் நாதங்களையும் வயலினில் தருவிக்கலாம். பாடுபவர்களின் குரல் போலவும் வயலினில் வாசிக்க முடியும். இது ஒரு மேல் நாட்டு வாத்தியமாக இருப்பினும் கர்நாடக சங்கீதத்துக்கு இன்றியமையாததொன்றாக விளங்குகின்றது.

எனது பதினைந்தாவது வயதினில், எனது அண்ணன் வாசிக்கும் வயலினை எடுத்து என் பாட்டிலேயே மீட்டுவதுண்டு. ஒருசமயம் எனது வாசிப்பைக் கேட்ட நாகராஜர் என்னும் குடும்ப நண்பர் ''யாரடா இவன் சுத்த அபசுரமாக வாசிக்கிறானே'' என ஏசிவிட்டு,

*4. இலங்கையில் நீங்கள் அறிமுகமாகவும், பிரபல்யமடையவும் துணையாக அமைந்தவர் பற்றி...?*

இங்கு என் முன்னேற்றத்திற்கு அடித்தளமாக விளங்கியவர் புல்லாங்குழல் மூர்த்தி ஐயர்தான். வல்வெட்டித்துறை சிவன் கோவிலில் திருமுருக கிருபானந்தவாரியார் வந்து பிரசங்கம் செய்த போது வயலின் வாசிக்க என்னை முதன் முதலில் மூர்த்தி ஐயர் ஏற்பாடு செய்து தந்தார். வாரியாரின் ஆசீர்வாதம் என்னை புகழடைய வைத்தது.

5. இசைத்துறையில் உங்களுக்கு மகிழ்வுதரும் நிகழ்வுகள் ஏற்பட்டதுண்டா?

வாரியாரின் பிரசங்கத்தில் வயலின் வாசிக்கும் போது ஒரு கட்டத்தில் மந்திரஸ்தாயியில் நான் வாசித்ததை அவர் கேட்டுமகிழ்ந்து ஆகா... வாயால் பாடியது போன்றிருந்ததே. நீ ரொம்ப நல்லாய் வாசித்தாயே...'' எனப் பாராட்டினார்.

சென்னை கர்நாடக சங்கீதக் கல்லூரியில் ஒருமணி நேரம் வயலின் வாசிக்கும் வாய்ப்புக்கிட்டியது. அக்கல்லூரி அதிபர் சந்தியா வந்தனம் ஸ்ரீநிவாச ஐயர் என் வாசிப்பைக் கேட்டு பாராட்டுரை வழங்கினார் இவை இரண்டும் எனக்கு மன மகிழ்வையும் நிறைவையும் தருகின்றன.

6. கச்சேரிகளில் வயலின் வாசிக்கும் சந்தர்ப்பங்களில் உங்களுக்கு ஏதும் சிரமங்கள் ஏற்படுவதுண்டா?

பலதரப்பட்ட கலைஞர்களுக்கு வாசிக்கும் போது சில கஷ்டங்களை எதிர் நோக்க வேண்டித்தான் இருக்கும். வட்டுக்கோட்டையில் நடைபெற்ற ஒரு புல்லாங்குழல் நிகழ்ச்சிக்கு வயலின் வாசித்தேன். புல்லாங்குழல் வாசித்தவர் என்ன இராகத்தில் வாசிக்கிறார் என்பதைக் கண்டு கொள்வதில் ரசிகர்கள் கஷ்டப்பட்டனர். எனக்குக்கூட சிறிது சிரமமாகத்தான் இருந்தது. ஒருகட்டத்தில் அவர் பாடியது சங்கராபரணம் என உணர்ந்து வயலினிலும் அதனை வாசித்தேன். எனது வாசிப்பை கொண்டு இராகத்தை கண்டு கொண்ட ரசிகர்கள் கைதட்டி எனக்கு பாராட்டும், மகிழ்ச்சியும் தெரிவித்தனர். ராகம்- பாவம், தெளிவு, விளக்கம் இல்லாதவர்களின் கச்சேரிக்கு வயலின் வாசிப்பது கஷ்டம் தான்.

7. இசை உலக மாணவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

★மாணவர்கள் குரு பக்தியுடையவர்களாக இருக்க வேண்டும்.

★ஆசிரியர் தரும் பாடங்களை நன்கு அப்பியாசிக்க வேண்டும்.



★ஒரு உருப்படியை எடுத்துக் கொண்டால் அதை பூரணமாக கற்றுக் கொண்ட பின்னரே அடுத்த உருப்படிக்குச் செல்ல வேண்டும் அவசரப்பட்டு அதிக உருப்படிகளை தவறாகக் கற்றுக் கொள்ள முற்படக் கூடாது.

★அப்பியாசம் செய்வதின் அளவைப் பொறுத்தே அவர்களின் முன்னேற்றம் அமையும்.

★இசை நிகழ்ச்சிகள் பலவற்றைக் கேட்டு கல்வி ஞானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். கேள்விஞானம் மிக மிக முக்கியமானது.

---

'' பூவாழி மன்னர்மநு நீதி வாழி
புகலரிய மடமகளீர்நிறையும் வாழி
ஆவாழி அந்தணர்தங் கூட்டம் வாழி
அருமறைவே தாகமங்கள் புராணம் வாழி
ஓவாத தவங்கருணை விரதம் வாழி
உலகிலுள்ள சராசரங்க ளனைத்தும் வாழி
மாவாழும் பிள்ளையார் திடரில் வாழும்
மருதடியில்கணபதிகள் வாழிவாழி ''

# நாமார்க்குங் குடியல்லோம்!

அடக்குமுறைக்கும் அதிகார வெறிக்கும் அடிபணியாத தன்மான எழுச்சிக் குரல்கள் அதிகார மறுப்புக் குரல்கள் — உலக வரலாற்றிற் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒலித்து வந்துள்ளன; ஒலித்து வருகின்றன. ஒரு தனிமனிதனுடைய அல்லது சமூகத்தினுடைய தன்மானமும் பண்பாட்டுணர்வுகளும் அதிகார வர்க்கங்களாற் பாதிக்கப் பட்ட சந்தர்ப்பங்களில் அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக இத்தகு குரல்கள் ஒலித்து வந்துள்ளமையையும், ஒலித்து வருகின்றமையும் நாம் அவதானிக்க முடியும்.

இக்குரல்களிற் பல ஒலிநிலையுடன் மட்டும் அமையாமற் சமூக இயக்கங்களாகச் செயல் வடிவு பெற்று வரலாற்றை வழிநடத்தி வந்துள்ளமைக்கான சான்றுகளும் பல உள. இவ்வாறு சமூக இயக்க வடிவுபெற்று வரலாற்றை வழிநடத்திய குரல்களில் ஒன்றே ''நாமார்க்குங் குடியல்லோம்'' என்ற திருநாவுக்கரசு நாயனாரின் திருவாக்கு. இதன் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட சமூகப் பேரியக்கமே தமிழ்நாட்டின் சைவ பக்தியியக்கம்; இதனால் வழிநடத்தப்பட்ட வரலாறே சைவ வரலாறு;

**கலாநிதி நா. சுப்பிரமணியன்**

அதிகார மறுப்புக் குரலை ஒலித்த நாவுக்கரசர் சைவப் பெற்றோருக்கு மகனாகப்பிறந்தவர்; மருணீக்கியார் என்ற இயற்பெயர் கொண்ட இவர் கல்வி நோக்கிலே சமணமதம் சார்ந்தவர். அங்கு கற்றுத்தேறி தருமசேனர் என்ற பெயருடன் சமணமதாசாரியாராகவும் திகழ்ந்தவர். பின்னர் சைவசமயமே மெய்மை என்ற உணர்வு பெற்ற நிலையில் அதற்கு மீண்டவர். இவரது இம்மீட்சியை பொறுக்காத சமணர் தமது அரசியல் அதிகார பலத்தைப் பயன்படுத்தி அவரைத் தண்டிக்க விழைந்தனர்; அதன்படி நாவுக்கரசரைக் கைது செய்ய அரச ஆணை பிறந்தது. அவ்வாணையுடன் அரச படை நாவுக்கரசரைச் சூழ்ந்து கொண்டது; அவ்வாறு தன்னைச் சூழ்ந்த படையினரை நோக்கி நெஞ்சை நிமிர்த்தி நின்று நாவுக்கரசர் ஒலித்த குரலே ''நாமார்க்குங் குடியல்லோம்'' என்ற மறுமாற்றத் திருத்தாண்டகம்;

## முகப்புச் சித்திரக்கதை

''நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ
மல்லோம்
இன்பமே யெந்நாளும் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத தன்மை யான
சங்கரநற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே யாமென்றும் மீளா வாளாய்க்
கொய்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே
எனத் தொடங்குவது இத்தாண்டகப் பதிகம்;

''யாம் யாவர்க்கும் மேலான பரம் பொருளான சிவபிரானின் அருளாட்சிக்கு உட்பட்டவர்கள்; எனவே பிறரெவருக்கும் நாம் அடிமை குடிமக்கள் அல்ல; யம பயமும் எமக்கில்லை; நரகத் துயரும் கிடையாது. எந்நாளும் எமக்கு இன்பமே நிலைத்திருக்கும்.

என்பது மேற்படி பாடலின் தெளி பொருள்; கொள்கைப் பற்றுள்ள வீரனொருவனின் தன்மான உணர்வின் வெளிப்பாடு இது என்பதை யாவரும் ஒப்புவர்; இத்த உணர்வின் அடிப்படையில் அவர் மேற்கொண்ட செயற்பாடுகள் தமிழ் நாட்டின் வரலாற்றிலே சைவநெறிக்கு ஒரு நிலையான வாழ்வளிக்கும் பெரு முயற்சியின் அத்திவாரமாயின; இதனைத் தெளிவாக உணர்ந்து கொள்வதற்கு தமிழ் நாட்டின் சமய வரலாற்றுச் செல் நெறியைச் உரிய வாறு விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

### சங்ககாலம்

தமிழரது வரலாற்றாரம்பகாலம் பொது வாக சங்ககாலம் என வழங்கப்படும். எட்டுத்

தொகை, பத்துப்பாட்டு ஆகிய தொகுதிகளில் அமைந்த பாடல்களிற் பல எழுந்த காலப் பகுதி அது. கி. பி 3-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுக் காலப் பகுதி வரலாறே சங்ககால வரலாறாகும்; மேற்படி இலக்கியங்கள் அக்கால மக்கள் வாழ்வில் நிலவிய சமய நம்பிக்கைகளைப் பற்றிய பல தகவல்களை அறியத்தருகின்றன. சிவன்; முருகன், கொற்றவை, திருமால், இந்திரன், வருணன், சூரியன் முதலிய தெய்வங்கள் அக்கால மக்களால் வழிபட்டமை அவ்விலக்கியங்கள் மூலம் தெரியவருகின்றது.

சிவன் என்ற பெயர் அன்று வழக்கில் இருந்ததாகத் தகவல் இல்லை. ஆல்கெழுகடவுள், பிறைநுதலோன், முக்கட் செல்வன் முதலிய பெயர்களால் அவர் சுட்டப்பட்டார். முருகன், கொற்றவை என்போர் தமிழரின் பாரம்பரிய தெய்வங்கள் என ஆய்வாளர் கருதுவர். கி. மு. 1000 ஆண்டுகட்கு முற்பட்டதாக அறியப்படும் ஆதிச்ச நல்லூர் தொல் பொருட்களில் முருகனுக்குரிய வேல், மயில், சேவல் சின்னங்கள் கண்டறியப்பட்டுள்ளன என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது: தமிழ் முருகனும் கொற்றவையும் முறையே நாளடைவில் வடமொழிப் பண்பாடு காட்டும் கார்த்திகேயனாகவும் துர்க்கை அல்லது உமை ஆகவும் இனங்காணப்படலாயினர். பரிபாடல் திருமுருகாற்றுப்படை ஆகிய சங்ககாலத்துக்குப் பிற்பட்ட நூல்களிலே வடமொழி சார்ந்த சமயக்கதைகள், கற்பனைகள், கருத்துக்கள் என்பன தமிழ் நாட்டிற் பரவத் தொடங்கி விட்டன.

(வளரும்)





அண்ணா

தொழிலகம்

இணுவில்.

(யாழ். போதனா வைத்திய சாலையின் ஆரம்ப சுகாதார பராமரிப்பு ஆராய்ச்சிப்பிரிவின் ஆலோசனையுடன் தயாரிக்கப் பட்டது.)



மருதடி விநாயகா
தேரேறி வாராய்
ஊரார் துயர் தீராய்

எமது வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும்

## இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

சகல விதமான டிசைன்களும் ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்,
வட இலங்கையில் மூன்று தலைமுறையாகச் சேவையாற்றி வரும்

ஒரே ஒரு ஸ்தாபனம்

## யப்பான் ஜுவலர்ஸ்!

க. ஆறுமுகம் பிள்ளை அன்சன்ஸ்

64, கன்னாதிட்டி வீதி
தொ. பே: 225182

யாழ்ப்பாணம்.




மில்க்வைற் சோப் தருவது
சிறந்த — ஆனால், சிக்கனமான சலவை!
அதன் மேலுறைகள் ஒவ்வொன்றும் தருவது
அரிய பயனுள்ள பரிசுகள்!!



மேலுறையில் திருக்குறள் அச்சிடப்பட்டுள்ளதா எனப் பார்த்து வாங்குங்கள்

மேலுறைகள் 1000 — ஒரு பெட்சீற்
,, 300 — ஒரு பாடசாலை பை
,, 100 — ஒரு நீதிக்குரங்கு அல்லது ஒரு உண்டியல் அல்லது ஒரு கைக்குட்டை

மேலுறைகள் 500 — ஒரு துவாய்
,, 200 — ஒரு பருத்தி நூல் தொப்பி
,, 25 — ஒரு அப்பியாசக் கொப்பி அல்லது மில்க்வைற் செய்தி

## மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

தபாற்பெட்டி இல: 77

525/2 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தந்தி ''மில்க்வைற்'' தொலைபேசி: 23233.

அழகான அமைப்பு! தரமான வேலைப்பாடு!! மலிவான விலை!!!

# அஷ்டலக்ஷ்மி

## கலண்டர்

- ✶ வீட்டுக்கு அழகுதரும் தெய்வீகப் படங்கள்
- ✶ தவறு இல்லாத பஞ்சாங்கக் குறிப்புகள்.
- ✶ நாள்தோறும் சுபநேரம், எமகண்டம், இராகுகாலம் என்பனவற்றின் நேரக்குறிப்புகள்
- ✶ தினமும் அற்புதமான பொன்மொழிகள், பொது அறிவுகள் அடங்கியது

அட்டையின் பின்புறம் சர்வமுகூர்த்த பஞ்சாங்கம், அரசாங்க, வங்கி விடுமுறை தினங்கள், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய தினங்கள் அதிர்ஷ்ட எண்கள் பற்றிய விபரங்கள் அமைந்துள்ளது.

தயாரிப்பாளர்: சிவா பிறின்ரேர்ஸ், த. பெ. எண் 1, கைதடி (இலங்கை).

# 'ஷப்ரு'வை நாடுங்கள்!



தரமான கலர்ப்படப்பிரதிகள்

★ அதிகுறைந்த கட்டணத்தில் ★ மிகக் குறுகிய காலத்தில்

கலர்ப்படச்சுருள் கழுவுதல் முற்றிலும் இலவசம்!

★ நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்தல்

3 முதல் 5 நாட்களில் விநியோகம்

**ஷப்ரு** 207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:– 22073



இச் சமய திங்கள் இதழ் நியூ உதயன், பப்ளிக்கேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், 15, 2வது ஒழுங்கை மின்சார நிலைய வீதியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

நம்பிக்கை
நாணயத்தின்
சின்னம் → ஷப்ரு

நிலையான முதலீடுகள்
கீழ்கண்ட வட்டி வீதங்களில்
வரவேற்கப்படுகின்றன

| 6 மாதங்கள் | 1 வருடம் | 2 வருடங்கள் | 3 வருடங்கள் |
|---|---|---|---|
| 18% | 20% | 23% | 24% |

நிதித்துறையில் உங்கள் நண்பன்

மேலதிக விபரங்களுக்கு:

**ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்**

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொலைபேசி: 589310, 500576

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.